34 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code

ISSN 2792-1026

முக்காலமும் வென்று முன்றாம் அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் துணிந்தெழு சஞ்சிகை

+94757000791 www.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 34 15 ஜுலை 2024 @skytamil.lk

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්
Reg No: PV 00249082




2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டி பற்றிய சிறப்பு தொகுப்பு



புர்ஜ் கலீஃபாவில் விளம்பரம் செய்ய கட்டணம் எவ்வளவு?



இரத்தினபுரி பிரதேசத்தில் சிறந்த ஒரு ஆளுமையின் ஓய்வு



பேசும் பேனாக்கள்

நூல் - எரியும் நட்சத்திரம்
நூல் - புழுதி
நூல் - வில்லோஜி வா வெண்ணிலா
நூல் - கார்த்திகை மாலதி வியாழன் 24
நூல் - தம்பி பிழைத்த எண்ணங்கள்



# தினக்குரல் உதவி ஆசிரியர் எம்.எச்.எப் ஹுஸ்னா அவர்களுடனான நேர்காணல்

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්
Reg No: PV 00249082



**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபகர், பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94781069510

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (றஷீமி) - கத்தார்

**ஸ்தாபகர், பணிப்பாளர்:** ஜே.எம். பாஸித்
**முகாமையாளர்:** அஸ்வர் ரிஸ்வி

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர் - பலாங்கொடை

**இணையாசிரியர்:**
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
ஹுசைப் முஸம்மில் - வடதெனிய

**ஆசிரியர் குழு :**
முனீரா வாஹித் - பதுளை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா – கொழும்பு
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
ஷீபா இப்றாஹீம் - மருதமுனை
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
மொஹமட் நிப்ராஸ் - வாழைச்சேனை
நூர் ஷாஹிதா - கொழும்பு
ஏ.சி.எம் .ஆதிப் - மல்வானை
ஷிபானா அஸீம் - மருதமுனை

**சமூக ஊடக குழு:**
எம்.ஆர். சப்ராஸ் - புத்தளம் (முகாமையாளர்)
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
நிஹாசா நிசார் - கத்தார்
அவ்ஷபா நாகூர்- ஏறாவூர்

**இணையத்தள பொறுப்பாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் - அட்டாளைச்சேனை

**தொகுப்பாளர்கள் :**
ஆஷிகா பர்சான் - கொழும்பு
அர்சிதா அமீர் - ஓட்டமாவடி

**விளம்பர பொறுப்பாளர்:**
றிப்னா றிபாய் - மாவனல்லை


தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com




# முன்னேற்றத்துடன் கடந்து செல்லும் மூன்றாவது ஆண்டு..



கவிப்பொய்கை
**ஜவ்ஸன் அஹமட்**
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் துணை அங்கமாக வெளிவரும் துணிந்தெழு சஞ்சிகை இரண்டு ஆண்டுகளை கடந்து மூன்றாவது ஆண்டில் அண்மையில் கால் தடம் பதித்தது,

எல்லோரும் சொல்வதை போன்று பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் துணிந்தெழு சஞ்சிகையின் பயணம் மூன்றாவது ஆண்டில் கால் தடம் பதிக்கும் போது மாபெரும் வெற்றியாகவே திகழ்கிறது.

இணையத்தில் தரவிறக்கம் செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு வாசகர்கள் மத்தியில் அறிமுகமாகி பல்வேறு கலைஞர்களையும் துறை சார்ந்த ஆளுமைகளையும் அறிமுகம் செய்த பயணத்தில். இன்றுவரை சுமார் 33 இதழ்கள் பிரசுரம் செய்யப்பட்டு வாசகர்கள் மத்தியில் நல்ல பல வரவேற்பையும் பெற்றுக் கொண்டது மட்டுமல்லாது இளம் ஆளுமைகளையும் புதிய படைப்பாளிகளையும் எழுத்துலகிற்க்கு இனங்காட்டி கொடுத்தது அதே இனங்காட்டலுடன் இன்று 34 வது சஞ்சிகையில் கால் தடம் பதிக்கிறது.

சாதி, மதம், மொழி, உள்நாடு, வெளிநாடு என கடல் கடந்தும் திறமைக்கு முதல் களம் தேடிக் கொடுப்பதில் துணிந்தெழு சஞ்சிகை பல்வேறு சவால்களை கடந்து தன் பயணத்தை இன்று வரை தொடர்ந்து வருகிறது இதில் மாற்றுக் கருத்து கிடையாது.

நம் எண்ணத்திற்கு ஏற்ப நாம் பயணிக்கும் துணிந்தெழு சஞ்சிகை இன்று வரை தலை நிமிர்ந்து துணிந்து பல்வேறு வகையான உந்துதலுடன் தூய கருப்பொருட்களோடு பல படைப்புகளை தந்திருக்கிறது.

அந்தப் பயணத்தில் இன்று நாம் மூன்றாவது ஆண்டை எத்தி இருக்கும் போது எவ்வாறு பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தோமோ அதே போன்று பல்வேறு அடைவுகளையும் கண்டு கொண்டோம்.

இலங்கையில் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மீடியா நிறுவனமாக எமது நிறுவனம் இயங்குகின்ற போது தனிமனித எண்ணத்தில் உருவானதே துணிந்தெழு சஞ்சிகையின் பயணம்,

எமது நிறுவனமும் குறித்த சஞ்சிகையும் பல்வேறு அடைவு மட்டங்களை குறித்து அடையாளப்படுத்தி சொல்லுகின்ற குறுகிய கால எல்லைக்குள் பாரிய வளர்ச்சி என்றே எம்மால் உறுதியாக சொல்ல முடிகிறது.

இதுவரை காலமும் கவிதை போட்டி நிகழ்வுகள் சிறுவர்களுக்கான கலை நிகழ்வுகள் துறை சார்ந்தவர்களை கௌரவித்தல் இளம் எழுத்தாளர்களுக்கு தமது துறையில் புத்தகங்களை வெளியிட ஏற்பாடு செய்து கொடுத்தல் சில சமயங்களில் சமூகவியல் சார்ந்த செயற்பாடுகளை

முன்னெடுத்தல் போன்ற அல்லது இன்னும் பல சேவைகள் எம்மால் பல கட்டங்களில் நிலை நாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக எமது சஞ்சிகை அல்லது சமூக வலைத்தளங்கள் ஆற்றல் மிக்க திறமையான பெண் எழுத்தாளர்களை அல்லது துறை சார்ந்தவர்களை ஆரம்பமாக கண்டறிந்து தனது பணியை ஆரம்பித்திருந்தது. இன்று அது விருட்சமாகி ஆண் தரப்பு வாயிலாகவும் ஊடறுத்து சிறுவர்களது திறமைகளையும் வெளி உலகுக்கு திரையிட்டு காட்டும் அறப்பணியை செய்து வருகிறது.

இப்பணியின் தொடர் அங்குமாக அண்மையில் கடல் கடந்து கத்தார் வாழ் இலங்கை மற்றும் இந்திய கலைஞர்கள் படைப்பாளிகள் துறை சார்ந்த நிபுணர்கள் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழ சஞ்சிகையின் ஊடாக கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான பாராட்டுக்களும் வழங்கப்பட்டிருந்தன.

அதேபோன்று சென்ற உலகக்கோப்பை கால்பந்தாட்ட போட்டியில் தனது முழு ஆதரவையும் வழங்கிய எமது நிறுவனம், கத்தார் நாட்டில் நடைபெற்ற ஆசிய கிண்ண உதைப்பந்தாட்ட போட்டிகளுக்கான தமது பங்களிப்பை தொடராக செய்ய பரிந்துரை செய்யப்பட்டு அதில் பல்வேறு நிகழ்வுகளை அரங்கேற்றி இருந்தமை மகிழ்ச்சியான ஒரு செய்தியாகும். அது மட்டுமல்லாது எமது மீடியா நிறுவனமானது கத்தார் நாட்டில் நடைபெறும் தனியார் நிகழ்வுகளுக்கு கூடுதல் பங்களிப்புகளை செய்வதுடன் இந்திய நாட்டு பண்பாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பல நிகழ்வுகளை அண்மையில் நடாத்தி இருந்தது .

மருதூர் மண் ஈன்று தந்த ஜே.எம்.பாஸித் மூன்றாண்டு காலம் வரை அதாவது இன்று வரை குறித்த எமது நிறுவனத்தை அழகாக நெறிப்படுத்தி பல்வேறு சவால்களை முகம் கொடுத்து அதில் வெற்றி கண்டு பயணிப்பது கடல் கடந்து பயணிக்கும் வெற்றியாளர்கள் அனைவருக்கும் சில சமயங்களில் சமர்ப்பணம் ஆகி போகிறது.

அதிலும் குறிப்பாக எமது சஞ்சிகைக்குழு உறுப்பினர்கள் நிர்வாக அங்கத்தவர்கள் உயர்மட்ட குழுக்கள் என்பன சிறப்பாக தமது சேவைகளையும் பணிகளையும் முன்னெடுத்து துணிந்தெழு சஞ்சிகையின் வெற்றிக்கு வித்திடுவதையும் எம்மால் மறந்து கடந்து விட முடியாது.

மேலும் எமது சஞ்சிகை குழு எதிர் வருகின்ற காலங்களில் பல்வேறுபட்ட சமூகவியல் சார்ந்த அல்லது கல்வித்துறை சார்ந்த அல்லது பொது விடயங்களில் தமது பணிகளை செய்வதற்காக எத்தனிக்கிறது.

வாசகர்களாகிய உங்களோடு கைகோர்த்து நாம் உலகையே உலா வர எத்தனிக்கிறோம் எங்களுடைய வெற்றிக்கு பின்னால் வாசகர்களாகிய உங்களது பின்னூட்டங்களும் ஒத்துழைப்புக்களும் பாரியளவில் செல்வாக்குச் செலுத்துவதை நாம் ஒருபோதும் மறந்து விடவோ மறுத்து விடவோ மாட்டோம்.

வாசகர்களாகிய நீங்களும் எங்களோடு மூன்றாவது ஆண்டை எத்திய தருணத்தில் கைகோர்த்து பயணியுங்கள். துணிந்தெழு சஞ்சிகையின் வாசகர்களாக நீங்களும் இருப்பின் உங்களது பின்னூட்டங்களை எமக்கு எழுத்து வடிவில் அனுப்பி வையுங்கள் அல்லது நீங்கள் ஒரு எழுத்தாளராக அல்லது கவிஞராக இருப்பின் உங்களது ஆக்கங்களை எமது சஞ்சிகை குழுவுக்கு அனுப்பி வையுங்கள்.

மூன்றாவது ஆண்டில் எம்மோடு நீங்களும் இணைந்து பயணிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என கருதுகிறோம்.



கவிதை

அஜ்வத் பாத்திமா வஹிபா - ஏறாவூர்.

# சீதனமே சீரழிவு

அன்பான துணைவிக்காய்
அலைந்து திரியும் ஆண் மகன்கள் சிலர்
அழகான மனைவிக்கும்
அழிவெடுக்கும் சீதனத்திற்கும் நெருப்பாய்
கொதிக்கும் பலர்

ஆண் மகனும் பெண் மகளும் காதலெனும்
ஒருமனதால் இணைவதல்லோ திருமணம்...
திருமணத்தில் சீதனத்தை சொருகி விட்டது
யாரோ?

சீதனம் தேடவே
தன் வதனம் காய்ந்து போய் ஓரமாய் நின்று...
தன் வாழ்வை ஒய்யாரமாய் தொலைத்து
விட்டாள் பெண்ணெனும் பூஞ்சோலை !!

பொது உலகிற்காய்
மின்னும் வாழ்விற்காய்
வாழ எண்ணும் அவளை ...
தூக்கி விட யாருமில்லையா ??
சீதனம் என்ற சோதனை வார்த்தைக்கு
சொர்க்க வாழ்வைத் தொலைத்து விட்டு
தொலைதூரம் சென்று தன் உறவுகளை
மறக்கிறாள்.
முடியாத வாழ்விற்காய்...
முடிக்க எண்ணும் எண்ணங்கள்..
சரியாத மலைகளாய் ஓங்கியல்லோ நிற்கிறது !!

உலகநிலை அறியாமல்
தன் உளவியலும் அறியாமல் ஊர்விட்டு எழுந்து
...
வெளிநாடு செல்கிறாள்...
தன் சீதனத்தை தேடவே !!!
அங்கே கலாச்சாரம் என்பதை அவள்
கனவிலும் காணவில்லை அனாச்சாரம் என்ற
அட்டூழியத்தை நனவிலே காண்கிறாளே !!

சேதமான சீதனத்துக்கு தன்னை சேலையாய்
கருதினால் அது கிழிந்து போன போதே
அதையும் எண்ணினாள்...
நரகமான வாழ்வை
வெளிநாடு என்பதில் கரைத்தாள்
அதில் அவளும் காணாமல் சென்று விட்டாள் !!!

சீதனம் தேடச் சென்ற
செல்லப்பிள்ளை போன்றவளின் ,
சேதி ஒன்றும் தெரியாமல் செத்துப் பிழைக்கும்
பெற்றோர்;
சில காலம் சென்றபின்
சீரழிந்த தன் வாழ்வை சிறையினுள்
அடைத்தது போல் தன்னை மேதை எனும்
இடத்திலிருந்து
பேதை என்ற குழியில்
புதைத்து மூடிவிடும் பெண்ணாவாள் !!!

சித்திரம் பேசுமா பெண்ணே உன் சீதனத்தை
பார்க்காதே வாழ்க்கை சீரழிவைப்பார்...
ஆண்களில் சிறந்தவன் யார் ?
உன் சீதனத்தை விரும்புவோனா ?
அன்றேல்
உன் ஆழ்மனதை விரும்புவோனா ??

திருமணம் என்பதற்குள்
சீதனம் ஒளிந்தால்...
உன் வாழ்வில் சீரழிவே உண்மை..
சீண்டி திரியும் சீதனத்துள் மாயவிழிகள் உண்டு
கண்டாயோ ??

அன்னப்படையே !!!
காவியக் கண்ணியே !!!
உன் வாழ்வில் சீதனமே கானல் நீர் ,
உன் இனிய கணவன் யார்?
அவன் உன்னையே சீதனமாக்கி உன் வாழ்வை
என்றும் சீரழிக்காதவன்!!!

காவியம் எழுதினால் அதில் சீதனத்தை
ஒழிப்பேன் !
அதன் சீரழிவையும் அழிப்பேன் !
என்றும் எம் பெண்களை காப்போம் !!
சீதனம் எனும் சீரழிவிலிருந்து !!!!!

ஷாக்கிர் கிலுறுதீன் - தோப்பூர்

# பெண்ணே! நீ துணிந்தெழு

தொழுகையை மறந்து
தொடர் நாடகங்களில்
தொடர்ந்திருக்கும் பெண்ணே -
உன் தொலைதூர
இலக்குகள் எங்கே?

தொடர்த்து நீ புறம் பேசுவதும்
தொலைபேசியில்
தொடர்ந்து பேசுவதும்
பொழுதுபோக்காயிற்றே
பெண்னே - உன்
எதிர்காலக் கனவுகள் எங்கே.

அனைவரையும்
குற்றம் சொல்லி
அடுப்பங்கரையைக்
காரணம் செல்லி
அன்று முதல்
ஒவ்வொன்றாய்
அனைத்தையும் நீ
இழந்தது போதும்

பெண்மையைக்
காரணம் காட்டி
தொன்மையதை
ஆதாரம் காட்டி
மென்மையை மட்டுமே
தன் தன்மையாய்க் கொண்டு
தாய்மையால் நீ செய்த
தியாகங்களும் போதும்

கல்விதனைக்
கையில் எடு
தோல்விகளை
மறந்து விடு
இனி திட்டங்களை
வகுத்து விடு
பல பட்டங்களை
தனதாக்கி விடு

பொற்காலம் பிறந்துவிடும்
உன் இருள் காலம்
இறந்துவிடும்
பொன்னாடைகள்
தேடி வரும்
உனக்கென்றே - நல்ல
எதிர்காலம் ஓடிவரும்

உன் இலக்கை நோக்கி
உயர்ந்தெழு
வாழ்வில் விளக்கேற்றி
நிமிர்ந்தெழு
புதுமைப் பெண்ணாய்
நீ எழு
பெண்ணே!
நீ துணிந்தெழு....!






# அறுகம்பே கடற்கரை

ஆசியாவின் மிகச்சிறந்த சுற்றுலாத்தல நாடுகளில் இலங்கை மிக முக்கிய இடத்தில் உள்ளது. தெற்காசிய நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையானது இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு தெற்கே அமைந்துள்ளது. இலங்கை ஏராளமான சுற்றுலா இடங்களுக்கு பெயர் பெற்றது.

குறிப்பாக கலாசாரங்கள் முதல் இயற்கை அழகு, சாகச நடவடிக்கைகள் மற்றும் அழகான கடற்கரைகள் வரை அனைத்தையும் கொண்டிருக்கிறது. அந்தவகையில், இலங்கையின் மிக முக்கிய சுற்றுலா தளமான அறுகம்பே கடற்கரை பற்றி பார்ப்போம்.


இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவிலில் அமைந்துள்ள ஒரு கடற்கரைப் பிரதேசமாகும் அறுகம்பே கடற்கரை கொழும்பிலிருந்து 317 கி.மீ தொலைவில் உள்ளது.


அறுகம்பே கடற்கரையில் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடுவதற்கு தேவையான சூழ்நிலை காணப்படுவதனால் அதிக சுற்றுலாப் பயணிகளின் மிக விருப்பத்திற்குரிய இடமாக காணப்படுகின்றது.

அலைச்சறுக்கு விளையாட்டுச் சாகசங்கள் நிகழ்த்துவதற்குச் சாதகமான அலைகள் அறுகம் பே கடற்கரையில் எழுகின்றன. அறுகம்பே மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடற்பரப்புகளில் அலைச்சறுக்கு விளையாடுவதற்கு 10 இடங்கள் உள்ளன.

ஏப்ரல் முதல் ஒக்டோபர் வரையிலான மாதங்கள் இங்கு அலைச்சறுக்கு விளையாட்டு செய்ய ஏற்றதாக உள்ளது.

கவிப்பொய்கை
**ஜவ்ஸன் அஹமட்**
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்





# மருதமுனை வரலாற்றுப் பக்கத்திலிருந்து மரணித்த உதய சூரியன் அமீன்

மறை என மா நபி என உலகிற்களித்த வல்லவன் இறைவனை போற்றி, வஞ்சணத்தின் ஜோதி நபி மீது வங்கநீராய் ஸலவாத்தும் ஸலாமும் உரைத்தபடி. "உங்களில் மரணித்தவர்களின் நல்ல விடையங்களை நினைவு கூறுங்கள்." என்ற மாநபியின் மகத்தான பொன் மொழியை நினைவுகூர்ந்தவனாக, மருதமுனை வரலாற்றில் அதன் புகழையும் மேன்மையினையும் தொலைதூரம்வரை கமளச் செய்த பலர் இன்றும் எம்மோடு இருக்கிறார்கள் இன்னும் பலர் இறையடி எய்துவிட்டார்கள், இருப்பினும் அவர்கள் புகழ் ஒரு போதும் மங்கிப் போனதாக நான் காணவில்லை ஏதோ ஒரு இடத்தில் அல்லது விடயத்தில் பிரதி பலித்து நிற்ப்பதென்பதே எதார்த்தமாகும்.

அவர்களின் வாழ்கை சரிதங்களையும், சமூகப் பணிகளையும், செய்த தொண்டுகளையும், பெற்ற அடைவுமட்டங்களையும் ஆவணப்படுத்த வேண்டிய தேவையும் அவைகளை வரும் இளம் சமூகத்தின் சிந்தையில் உதிக்கச் செய்வதுமான அறப்பணி எம்மவர்கள் மீது அல்லது எழுத்தாளர்கள் மீது இன்றியமையா கடப்பாடாகும். அதிலும் குறிப்பாக உடனிருந்தவர்களின் அனுபவப் பகிர்வுகளை தொகுப்பாக்கம் செய்வது என்பது காலத்தில் தேவையாகும். அப்பணியை இன்று எம்மில் பலர் செய்து வருவதையும் அவர்களின் தொகுப்புகள் மிக்க வரவேற்பு பெறுவதையும், அவை வரலாற்று ஆவணமாக பலரால் புரட்டப்பட்டு பல செய்திகள் திரட்டப்படுவதையும் காணக் கூடியதாகவே இருக்கிறது, அந்த வரிசையில் தன் தந்தையின் சமூகப் பணிகளும், வாழ்வியல் எதார்த்தங்களும் உலகிற்கு பறைசாற்றப்பட வேண்டும், இளம் தலைமுறைகள் அவர் பற்றியதான செய்திகளை அறிய வேண்டும் என்ற இலக்கை நோக்கி நகர்ந்து கவிஞர், எழுத்தாளர் மலீஸ் அமீன் அவர்கள் வெற்றி நடை போடுவதை காணக் கிடைக்கிறது.

இந்த ஆவண புத்தாக்கம் முன்பே செய்து முடித்திருக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தும் கூட நாம் அப்பணியை செய்ய மறந்ததன் விளைவாக இளம் எழுத்தாளர் மலீஸ் அமீன் எந்தவித முன் அனுபவங்களும் இன்றி தனித்து நின்று இதை செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் "மருதமுனை வரலாற்றை நோக்கி" என்ற இந்த நூலை பிரசவிக்கிறார்.
இந் நூலும் மருதமுனை வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும் என நம்புகிறேன்.

நூலின் கருப்பொருளாகிய இப்ரா லெப்பை மறைக்கார் அமீன் B.A (AD.O) அவர்கள் பற்றிய கருத்தாடல் என்பது என்னைப் பொறுத்தவரையில் செவியேறலாக கேட்டவைகளையும் நம்பகமான பலர் சொல்ல அவர்களின் பேச்சு மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாகவும் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலும் சில விடயங்கள் இங்கு பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இப்ரா லெப்பை மறைக்கார் அமீன் B.A (AD.O) என்பவரின் வகிபாகம் என்பது பெருங்கடல் போன்றது அதன் ஆழத்தாலும் அகலத்தாலும்.

ஆழத்தால் அவரை ஆழ்ந்து சிந்திக்கின்ற போது படைத்த இறைவனை அனுதினமும் இறைஞ்சக்கூடிய சாதுவான குணம் படைத்த ஒருவராக மட்டுமல்லாது தேவைக்காக மட்டும் பிறரோடு பேசுகின்ற முறையும் பணிவாக நடந்து கொள்ளும் நடத்தையும், பிள்ளைகளின் நல்ல தகப்பன் என்ன விடையங்களையும் கேட்கின்ற போது இப்படியான மனிதர்களை நாம் சந்திக்கவில்லையே என்ற ஒருவகை தாக்கத்தோடு கூடியதான ஏக்கத்தை ஏற்படுத்துகிறது.

**அகலத்தால் அவரது செயற்பாடுகளை பார்க்குமிடத்து இரு எண்கருக்கள் மூலமாக அவைகளை நான் நோக்குகிறேன்.**

**1.வாழ்வியல் நிலை**
**2.சமூகப் பணி என்பனவாகும்.**

## 1.வாழ்வியல் நிலை

வாழ்வியல் நிலையை பொறுத்தவரையில் இப்ரா லெப்பை மறைக்கார் மற்றும் இஸ்மாலப்பை பாத்திமா தம்பதியினருக்கு 1949 ஆம் வருடம் ஆவணி மாதம் 13 ஆம் தேதி பிறந்ததிலிருந்து அவர் மரணிக்கின்ற வரையான வாழ்வியல் யதார்த்தங்களையும் முன்னேறிச் சென்ற வழிமுறைகளையும் கல்வியில் அடைந்து கொண்ட அடைவு மட்டங்களையும் தொழில் ரீதியான முன்னேற்றங்களையும் மக்களோடு பழகிய விதத்தினையும் சொல்வதாக அமைந்திருக்கும்.

இப்ரா லெப்பை மறைக்கார் அமீன் B.A (AD.O) அவர்கள் கல்வி மீது கொண்ட அக்கறையும் அதற்காக இரவு பகலாக செய்த முயற்சிகளும் மிக்க போற்றப்பட வேண்டியது என்பதை சில துணுக்குகள் மூலமாகவும் ஊர் பிரமுகர்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ள கிட்டியது என்பதே கூடுதல் தகவல்.

ஆரம்ப நிலை கல்வியை தனது சொந்த ஊரில் கற்று அன்றைய காலங்களில் மேற்படிப்புக்கு பிரபல்யமாக இருந்த பல பாடசாலைகளில் (இடங்களில்) சிரமங்கள் பாராது தமது கல்வியை பெரும் சவாலுக்கு மத்தியில் தொடர்ந்தது இங்கு அடிக்கோடிட்டு காட்டப்பட வேண்டிய சிறப்பம்சமாகும்.

இதன் விளைவாகவே ஊரின் முதலாவது B.A பட்டதாரி என்னும் பெயர் நாமத்துக்கு சொந்தக்காரர் ஆகிப் போகிறார். இன்று வரை அது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருப்பதும் நிஜமே.

கல்வி மீது கொண்ட கூடுதல் ஈர்ப்பினால் 1970 ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு 1972 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் கல்வி கற்று வெளியேறக்கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது.

இன்னும் மேன்மை கொள்ள வேண்டிய சிறப்பம்சமாக 1973 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டதாரி என்ற கௌரவத்தினை பதியுதீன் மஹ்மூத் அவர்களினால் பெற்றுக் கொண்டார், ஆனால் இப் பட்டம் மறு புரத்தில் மருதமுனையின் முதல் பட்டதாரி என்ற மகுடத்தை பெற்றுக் கொடுத்தது.

இதன் பிற்பாடு அரசு சேவைகளில் தனது தொழில் நிமித்தம் பல்வேறுபட்ட பதவிகளில் பதவி வகித்து சிறப்பான சேவையினை செய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பதுளை போலிஸ் நிலையம் மற்றும் கல்முனை போலீஸ் நிலையங்களில் இவரின் சேவைகள் பாராட்டத்தக்கது.

அத்தோடு மட்டும் நின்று விடாது மேலும் தொடர்ந்த இவரது பணி விவசாய திணைக்களத்தோடு ஒன்றித்ததாக சுமார் 24 வருட காலம் தொடராகிப் போனது என்ற தகவல்களையும் என்னால் திரட்டிக் கொள்ள முடிந்தது.

### 2. சமூகப் பணிகள்.


இவரது சமூகப் பணிகளை ஆராய்கின்றபோது முதல் கட்டமாக பாடசாலை காலங்களில் இருந்தே சிறந்த ஒரு சாரனராக இவர் கடமையாற்றி இருப்பது இவரின் சமூகப் பணிக்கு சான்று பகர்கிறது.

அதற்குண்டான புகைப்பட ஆதாரங்களும் அத்தாச்சி பத்திரங்களும் இன்றளவும் பாதுகாக்கப்படுவது மறுப்பாளர்களின் குறை கூறலில் இருந்து விலகி நிற்கிறது.

மேலும் தன்னுடைய மரண காலம் வரை அம்பாறை மாவட்ட விவசாய குடும்பங்களின் அபிவிருத்திகளோடும் அதன் முன்னெடுப்பு செயற்பாடுகளோடும் அவரது பணி பின்னிப்பிணைக்கப்பட்டிருந்தது. அவர் மேலும் சமூகத்தின் மீது கொண்டிருந்த அக்கறையை நன்கு புலப்படுத்தி நிற்கிறது.

அப்படியாக ஒரு நல்ல மனிதனை மருதமுனை மண் இளந்தாலும் அவர் பணிகளையும், பெற்ற புழ்ச்சிகளையும் மறந்து போகாது என்பது ஆணித்தரமான உண்மையாகும்.

அவரை இறைவன் பொருந்திக் கொண்டு அவர் சேவைகளையும் எண்ணங்களையும் ஏற்று சுவனபதியில் வாழவைப்பானாக.






# தேடுகிறேன்

இன்னும்தான் தேடுகிறேன்........
சலிப்பில்லாமல்நானும் நம்பிக்கையுடன்....

ஊழலில்லாதவனை- அரசியலில்
மக்களுக்காய் வேலை செய்பவனை-
அரசதுறையில் மொட்டை
யடிக் காவொருவனை- திருப்பதியில்
கோட்சூட் அணிந்து நடப்பவனை-
சித்திரையில்

ஒரு சுகதேகியை- ஆஸ்பத்திரியில்
நாற்பதில் தொடங்கினேன் நான் தேட
தொண்ணூறு எனக்கு இப்போது
கண்மூடும் நாள் தொலைவிலில்லை
நன்கறிவேனதை
என் ஆசைபோல நான்
காணாததை நீ கண்டால் காட்டிடு எனக்கும்
கண்மூட முன்னே இலங்கையனே!
புண்ணியமுனக்கு கோடியப்பூ.......

**கலாபூசணம் ஹொரொவ்பொத்தான**
**அகமட் இம்தியாஸ்**

றிஸ்னா அசாருதீன்
ஊடகக் கற்கைகள் துறை - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



# விடியலை நோக்கிய நடை...

மனித வாழ்வைப் பொறுத்த வரையில் அது இலக்குகள், ஆசைகள், மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவற்றால் சூழப்பட்டதொரு பெரிய பரப்பாகக் காணப்படுகிறது. தன்னுடைய இலக்கினை அடைய வேண்டும் என்ற அவாவுடன் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் பயணித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். பெரும்பாலும் அப் பயணமானது மனித வாழ்வின் அத்தியவசியத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை முதன்மைப்படுத்தியதாகவும் இருந்து வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அத்தியவசிய தேவைகளைப் போலவே மனித வாழ்வில் பயணங்களும் இன்றியமையாத ஒரு அம்சமாக மாறி விட்டது.

இதனால் தான் மனித வாழ்வில் பயணங்கள் என்றும் ஓய்வது இல்லை என்று சொல்வார்கள். நாம் அன்றாடம் எத்தனையோ பயணங்களை மேற்கொள்கிறோம். எவ்வளவோ இடங்களுக்குச் செல்கிறோம். எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களுள் சிலர் வாழ்வையே பயணமாகக்கொண்டு சுடும் வெயிலிலும், வீதி ஓரங்களிலும் துவண்டு கிடக்கும் பாதையோர யாசகர்களைப் பற்றிச் சிந்தித்தது உண்டா??

அவர்களின் ஒவ்வொரு நடையும் ஏதோ ஒன்றுக்காகத் தினமும் ஓயாது சென்று கொண்டு தான் இருக்கின்றன. அப் பயணத்தில் அவர்கள் சலிப்புற்றாலோ, துவண்டு கிடந்தாலோ அன்று அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை தான் ஏற்படும். அவர்களைப் பற்றியும் நாம் ஆழமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறான நிலைமையில் எம்மிடம் வரக்கூடிய சிலருடன் நாம் கோபத்துடன் கதைக்கின்றோம். எமக்கு ஏதேனும் சங்கடமான நிலைமைகளின் போது அவர்களைப் புறக்கணித்து தீய வார்த்தைப் பிரயோகங்களால் அவர்களது மனதைப் புண்படுத்தி விடுகின்றோம். இன்னும் சிலர் எம்மிடையே வந்து ஏதேனும் தமக்குக் கொடுக்கும் படி கேட்டால் நாம் அவற்றைக் கவனத்தில் எடுக்காது மிக சுலபமாகக் கடந்து செல்கிறோம். அவர்களும் எம் போன்ற மனிதர்களே தவிர வேறு அல்லர் என்பதும், எமக்கு இருக்கக்கூடிய அதே உணர்வுகளோடு தான் அவர்களும் இறைவனால் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் எம்மில் சிலரது அறிவிற்கு எட்டாத ஒரு விடயமாக இருந்து வருகிறது.

கிடைக்கக்கூடிய இடங்களைத் தாராளமாய் ஏற்றுக்கொண்டு தலை வைத்து உறங்கும் பக்குவமும், எது நேர்ந்தாலும் பரவா இல்லை என்று நினைத்தபடி நிம்மதி இன்றி உயிரைக் கைகளில் பிடித்துக்கொண்டு கழியும் இராப் பொழுதுகளும் விடியலின் வருகைக்காய் ஏங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. கிடைக்கும் கொஞ்ச உணவில் தன் வயிற்றுப் பசியை போக்குவதா? " அம்மா! பசிக்கிறது " என்று அழுதுகொண்டிருக்கும் தன் குழந்தையின் கண்ணீர் துடைப்பதா? என்று தவித்தபடி முழுவதுமாய் குழந்தையின் கண்ணீரை மட்டும் துடைத்துக்கொண்டு தன் வயிற்றை வெறுமையாய் வைக்கும் உள்ளங்களும் அவர்களுக்குள் இருக்கத்தான் செய்கின்றன. இவர்கள் பற்றி அக்கறை கொள்ளும் உள்ளங்கள் எம்மில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?? சூழ்நிலைகளைச் சகித்துக்கொண்டு சுக, துக்கங்களை ஏற்றுக்கொண்டு மனம் நிறையாவிடினும், வயிற்றுப் பசி

தீர வேண்டும் என்ற மன ஆதங்கத்துடன் அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு சுழன்றுகொண்டுதான் இருக்கிறது. தட்டில் பத்து ரூபாயேனும் போடக்கூடிய தனவந்தர்களின் பிறந்தநாள் எப்போது வரும் என்று பார்த்துக்கொண்டிருக்கும் அளவிற்கு அவர்களின் ஆசைகளும் ஏக்கங்களும் விடியலை நோக்கி இன்றும் நடைபோட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.

சுருங்கிய முகமும், நடுநடுங்கிக்கொண்டிருக்கும் கைகளும், கலங்கிய கண்களுமே அவர்கள் யார் என்பதனை எமக்கு அடையாளப்படுத்தி விடுகின்றன. அவர்கள் தம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரும், ஏதும் கடுமையாகச் சொல்லிவிடுவார்களோ? என்ற ஏக்கத்துடனேயே ஒவ்வொரு நாளையும் கடந்து செல்கிறார்கள். உண்மையில் அவர்களை எமது சமூகம் ஏதோ ஒரு வகையில் புறந்தள்ளிக்கொண்டு தான் இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் நாம் அவர்கள் மத்தியில் எதிரிகளாகத் தான் நடந்துகொள்கிறோம். அவர்களும் எம் போன்ற மனிதர்களே தவிர வேறு யாரும் இல்லை. அவர்கள் மத்தியில் பல்வேறு திறமைகளையும் முடக்கிக்கொண்டு சாதிக்கத் துடிப்பவர்களும் அவர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆசைகளும், ஏக்கங்களும் நிறைந்த அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு, எப்போது தான் விடியும்? என்பது கேள்விக்குறியே!

பணம் பணம் என்று நேரம் காலம் பாராது ஓடிக்கொண்டிருக்கும் இந்த இயந்திரமயமான உலகில், வயிறு நிறைய ஒரு பிடி சோறு கிடைத்தால் போதும் என்று எண்ணக்கூடிய அவர்கள் மத்தியில் எமது சமூகம் எங்கேயுள்ளது. நிரந்தரமே இல்லாத இந்த உலக வாழ்வில் நாம் மரணித்த பிறகு எதனையுமே எடுத்துச் செல்லப் போவது இல்லை. மாறாக ஒரு மனிதனுக்குக் கொடுக்கும் கொடையும், நல்ல காரியங்களுமே இறுதியாக எமக்கு கை கொடுக்கும்.

"அம்மா " என்ற அவர்களின் வார்த்தைக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் மறைந்து இருக்கின்றன. வயிற்றிலும், கைகளிலும் குழந்தைகளைச் சுமந்துகொண்டு வெயில், மழை பாராது, வீதி ஓரங்களிலும், பொது இடங்களிலும் ஒரு கைப்பிடி சோற்றுக்காய் பெண்கள் தள்ளாடித் திரிவதனையும் பார்க்க உள்ளத்தில் ஏதோ ஒரு பிணி ஆட்கொண்டது போலத் தோன்றுகிறது. உச்சி வெயில் நேரங்களில் காலில் பாதணிகள் கூட அணியாத வண்ணம் சுடு மணலிலும், வீதிகளிலும் அவர்களின் கால் தடம் பதியாத இடம் எங்கு தான் உள்ளது? அடுத்த நபர்களைத் தன்னோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்களுக்கு எழக்கூடிய மன வலியை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. பத்து மாதங்கள் சுமந்து தாம் பெற்று வளர்த்த பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களாகவும், குடும்பப் பின்னணியால் புறந்தள்ளி ஒதுக்கப்பட்டவர்களாகவும், போரில் பாதிக்கப்பட்டவர்களாகவும், அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்களாகவும் தமது வாழ்நாளை நிம்மதி இன்றிக் கழிக்கும் இவர்கள் கடவுளிடம் கேட்டுப் பெற்ற வரமா இது?

ஆசைகளைத் தம்முள் அடக்கிக்கொண்டு கொடுப்பதைக் கைகள் ஏந்தி வாங்கிக்கொண்டு நடை போட ஆரம்பிக்கிறது அவர்களது வாழ்வு. தமது ஆசைகள், கனவுகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற வார்த்தைக்கு அவர்கள் வாழ்வில் ஒரு துளியேனும் இடமே இல்லாமல் போய் விடுகிறது. கை நிறையச் சம்பாதிக்கக் கூடிய மனிதர்கள் கூட இன்றைய எமது நாட்டினுடைய பொருளாதார நிலைமை தம்முடைய வாழ்வில் பாரிய தாக்கத்தினை செலுத்தி உள்ளது என்று கூறும் அளவிற்கு இருக்குமேயானால், கொடுப்பதை எடுத்துக்கொண்டு குருவி சேர்ப்பது போல நாணயக் குற்றிகளைச் சாரி மடிப்பில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கும் இவர்கள் மத்தியில் பெரும் பெரும் உழைப்பாளிகள் எங்கே இருக்கிறார்கள். தீர்வற்ற தீராத் திகிலால் திண்டாடிக்கொண்டு இருக்கும் அவர்களது வாழ்வில் வயிறார உணவு உண்டு பல நாளாயிற்று என்ற குரல்களும் இன்றுவரை ஒலித்துக்கொண்டு தான் இருக்கின்றன.

இவ்வாறு பல கனவுகள், ஆசைகள் சுமந்து வாழும் அவர்களது வாழ்வில் இருள் நீங்கி, விடியல் பிறக்க நாம் அவர்களுக்கு எம்மால் இயன்றளவு கொடுத்து உதவுவது என்பது எம்மை சகல தீய சக்திகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளப் பக்க பலமாய் இருக்கும். மாறாக அவர்களது உணர்வுகளையும், ஆசைகளையும், ஏக்கங்களையும் வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்து செல்லாமல் அவற்றுக்கு மதிப்பளித்து அவர்களை நம்மில் ஒருவராக மதித்துச் செல்லப் பழகுவது எமது தலையாய கடமையாக இருந்து வருகிறது.



30 டிசம்பர் 2021 அன்று கொழும்பு Elphistone அரங்கில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் **துணிந்தெழு சஞ்சிகை பற்றிய அறிமுக நிகழ்வு நடைபெற்றது.** இந்த நிகழ்வில் முக்கிய தலைவர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல்வேறு சமூகத்தினர் கலந்து கொண்டனர். நிகழ்வில் எமது உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் அறிமுகம் செய்து வைத்தனர்.

# நான்கு வருடங்களுக்குள் நடைபெற்ற சில முக்கிய நிகழ்வுகள்

**எதிர்காலத்தில் ஊடகத்துறையின் வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வு திட்டத்தின் கீழ் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஊடக கருத்தரங்குகள் இவ் ஊடக செயலமர்வினை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஷிஹானா நௌபர் அவர்களினால் நடத்தப்பட்டது**.



தற்போதைய டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக இணைய ரீதியான பல திட்டங்களை ஸ்கை தமிழ் ஊடகவலையமைப்பு முன்னெடுக்கவுள்ளது. அந்த வகையில் இலத்திரனியலோடு தொடர்புபட்ட பல செயற்பாடுகள் பலரும் நன்மை அடையும் வகையில் விழிப்புணர்வு திட்டங்களோடு முன்னெடுக்கப்படும். E-Magazine, E-Paper, E-Book, QR Code System போன்ற தற்காலத்தில் பலரும் அறிந்து கொள்ள வேண்டிய இலத்திரனியல் துறையோடு சம்பந்தப்பட்ட பல விடயங்கள் பற்றிய தெளிவுகள் வழங்கப்படும் என்ற நோக்கை கொண்டு இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கபடுகின்றன.

அஹமட் அஷ்ரிப் - (பாணந்துறை)



# இஸ்லாமும் இன்றைய திருமணங்களும்

மனிதன் தனித்து வாழ இயலாது. அவன் பிறந்தது முதல் தாயின் அரவணைப்பும் தந்தையின் பராமரிப்பும் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைப்படுகின்றன. குடும்பத்தில் கணவன் மனைவி பிள்ளைகள் என ஒரு முக்கிய உறுப்பினர்கள் ஆவர். உலக வாழ்க்கை இயக்கம் பெறுவதற்காக அல்லாஹ் அனைத்தையும் சோடி சோடியாக படைத்திருக்கின்றான். அதுபோல் மனிதனையும் ஆண், பெண் என்ற சோடிகளாக வைத்திருக்கின்றான் . ஆதம், ஹவ்வா ஆகிய முதல் மனிதனிலிருந்து அல்லாஹ் பூமியின் மனித இனத்தை விருத்தி செய்தான். உலகில் ஆண்களுக்கு பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் துணையாக இருப்பது தான் இறை ஏற்பாடாகும். எந்த ஒரு ஆணும்,, பெண்ணும் திருமணம் செய்யாமல் பிரம்மச்சாரியாக வாழ வேண்டும் என இஸ்லாம் கூறவில்லை.

மேலும் திருமணம் என்பது இரு உள்ளங்களை இணைக்கும் உறுதிமிக்க ஒரு உன்னதமான பந்தம் ஆகும். இது ஒரு அழகான ஒரு உறவாகும். இதில் பாசத்துடன் கூடிய கருணையும் தூய்மையான அன்பு செழிப்புற்று விளங்குகின்றன. நேசமும் மிக்க இந்த இல்லறத்தில் ஆண் பெண் இருவரும் மன நிம்மதி மன மகிழ்ச்சி மற்றும் பாதுகாப்பு எனும் அருட்கொடைகளை முழுமையாக பெறுகின்றனர். இதற்காகத்தான் அல்லாஹ் இரு ஆன்மாக்களுக்கும் இடையே திருமண பந்தத்தை ஏற்படுத்துகிறான்.

மேலும் இஸ்லாமிய பார்வையில் திருமணம் என்பது நிம்மதியையும், உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தக் கூடிய ஓர் உறவாகும். சமூகத்தின் அடித்தளமாக அமைவது குடும்பம் ஆகும். குடும்ப உருவாக்கம் திருமணத்தின் மூலம் இடம்பெறுகின்றது. அல் குர்ஆன் குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவத்தை கொடுத்துள்ளது. அது தொடர்பான சட்டதிட்டங்களை ஈமானோடு இணைத்து விரிவாக எடுத்துரைத்துள்ளது. பல இடங்களில் நபிமார்களின் குடும்பங்கள் பற்றியும் பேசுகின்றது.

இஸ்லாம் அதனை நபிமார்களின் வழிமுறை என போதிக்கின்றது. அதில் ஈடுபடும்படி கட்டளையிடுகின்றது. அதன்பால் ஆர்வமூட்டுகிறது.

“உங்களின் வாழ்க்கை துணையை இல்லாதோர்க்கு திருமணம் செய்து வையுங்கள்" (24அந்நூர்:32)

"வாலிபர்களே! உங்களில் சக்தி வாய்ந்தவர்கள்

திருமணம் செய்து கொள்ளட்டும் ஏனெனில் அது பார்வையை கட்டுப்படுத்தும். மர்மஸ்தானத்தை பாதுகாப்பதற்கும் சிறந்ததாகும். சக்தியற்றவர்கள் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும் அது அவருக்கு பாதுகாப்பாக இருக்கும்." (புகாரி)

மேலும் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் திருமணம் பற்றிய சில சட்ட தீர்ப்புகளை முன்வைத்துள்ளனர். இதன் பிரகாரம் உடல் பலமும் பொருளாதார வளமும் உள்ள ஓர் ஆண் திருமணம் செய்து கொள்வது சுன்னத்தாகும். இத்தகைய ஒருவர் பாவத்தில் விழுந்து விடுவார் என அஞ்சினால் விவாகம் செய்வது வாஜிபாகும். பெண்ணுக்கும் இதே விதிதான். எனினும் பொருளாதார வளமிருத்தல் என்ற நிபந்தனை அவளுக்கு இல்லை. இஸ்லாமிய ஷரீஆவின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்களில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். சந்ததியை உருவாக்குதல்; என்பது மனித இனத்தை நீண்டகால இருப்பை குறிக்கின்றது. திருமணத்தின் பலன்களில் ஒன்று சிறந்த சுயத்தை சந்ததிகளை தோற்றுவிப்பது என்ற கருத்தை அல்குர்ஆனும் சுன்னாவும் போதிக்கின்றன.

எனவே பிள்ளைகளைப் பெற்றிருப்பது என்ற எல்லையைத் தாண்டி நீண்டகால பரம்பரை ஒன்றை உருவாக்குவது குறிக்கின்றது. எனவே மனித இனம் நிலைத்திருப்பதற்கு ஒரு பொறிமுறையே திருமணமாகும். திருமணம் என்பது உலகில் ஆணும் பெண்ணும் அடைந்து கொள்கின்ற மிகப்பெரிய இன்பமும் சந்தோஷமும் திருப்தியும் ஆகும்.அது உடலையும் உள்ளத்தையும் சந்தோஷப்படுத்துகிறது.

“நீங்கள் அமைதி அடைந்து கொள்வதற்காக உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளைப் அடைத்தான். உங்கள் மத்தியில் அன்பையும் அருளையும் ஏற்படுத்திய மேலும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்றாகும்"(அல் குர் ஆன்30;:31)
திருமணம் ஒரு மனிதனிடத்தில் அமைதியையும், நிதானத்தையும் ஒரு விடயத்தில் சரியாக கையாளும் ஆற்றலையும் அபார பொறுப்புணர்ச்சியும் கொண்டு வந்து சேர்கின்றது. மன அமைதி ஒருவரது செயலாற்றலை அதிகரிக்கின்றது. உற்பத்தித் திறனை பன்மடங்கு ஆக்குகின்றது.

உடல் அமைதி என்பது பாவங்களிலிருந்து, குற்றச் செயல்களிலிருந்து, ஆட்கொல்லி மற்றும் சமூக நோய்களிலிருந்து பாதுகாப்பு தருவதைக் குறிக்கும். அல் குர்ஆன் திருமணம் ஆனவர் குறிப்பதற்கு “முஹ்ஸன்” என்ற சொல்லை பயன்படுத்துகின்றது. இந்த சொல் “ஹிஸ்ன்”(பாதுகாப்பு அரண்) என்ற சொல்லில் இருந்து பிறந்ததாகும்.

இங்கு திருமணம் என்பது ஒரு பாதுகாப்பு அரண். திருமணம் முடித்தவர் அந்த அரணுக்குள் பாதுகாப்பாக இருப்பவர் என்ற கருத்து பெறப்படுகிறது. மேலும் திருமணம் அவரை தவறான குற்றச் செயல்களில் இருந்து பாதுகாத்து விடுகிறது. இபாதத்துக்களில் அவரை மன அமைதியோடு ஈடுபட வழி செய்கின்றது.

திருமணம் பொறுப்புணர்வை தோற்றுவிப்பதன் மூலம் சிறந்த சமூக கட்டமைப்பை உறுதி செய்கின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குடும்பப் பொறுப்பையும் சமூக பொறுப்பையும் பற்றி பேசியுள்ளார்கள்.

“தலைவன் ஒரு பொறுப்பாளன். அவர் மக்கள் குறித்து விசாரிக்கப்படுவான் தனது குடும்பத்திற்கு பொறுப்பாளன் குடும்பம் குறித்து விசாரிக்கப்படுவான் பெண் தனது வீட்டுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் பொறுப்பாளர்கள் இது பற்றி விசாரிக்கப்படுவாள்" (புகாரி).

**தொடரும்...**



# பேசும் பேனாக்கள்

## நூல் விமர்சனம்




நூல் விமர்சனம் மற்றும் அனுபவப் பகிர்வு பக்கத்தினூடாக இந்த மாத இதழில் அண்மையில் வெளியீடு செய்து வைக்கப்பட்ட நூல்கள் பற்றிய சிறு குறிப்புகளை காணலாம்.

இது வாசகர்கள் மத்தியில் வாசிப்பு அனுபவத்திற்கு வித்திடும் என்பதற்காகவும் எழுத்தாளர்களை அறிமுகம் செய்ய உந்து சக்தியாக இருக்கும் என்பதனாலும் இங்கு இவை அடையாளப்படுத்தி காட்டப்படுகிறது.

**01. நூல் :- புழுதி**
**நூலாசிரியர் :- கவிஞர் காரையன் கதன்**
**வகை :- கவிதை**
**வெளியீட்டகம் :- தாயதி**
**வெளியீடு :- 25**
**பக்கங்கள் :- 112**

மிக அண்மையில் வெளியீடு செய்து வைக்கப்பட்ட இந்த கவிதை பிரதி பல்வேறுபட்ட உணர்வுகளின் வெளிப்பாடாக திகழ்வதுடன் மனித வாழ்வியலோடு ஒன்றித்து போவதையும் அவதானிக்கலாம் அதற்கு சான்றாகவே கவிதைகளின் தலைப்புகள் சான்று பகர்கிறது.




சமூக வலைத்தளங்கள் ஊடாக அறியப்படும் கவிஞர் சமூக செயற்பாட்டாளர் காரையன் கதன் எழுதிய கன்னிப் பிரசவமே இந்த நூல்.

இதில் அவர் கொண்டு வருகின்ற அத்தனை உணர்வுகளும் மிக அப்பட்டமாக எல்லோராலும் விரும்பி பேசப்படுகின்ற அல்லது அன்றாடம் உபயோகம் செய்கின்ற வழக்கு சொற்களைத் தழுவியதாகவே அமைகிறது,

இந்தப் பிரதியின் வெளியீட்டில் பாரிய பொறுப்பும் கடமைப்பாடும் தாயதி தில்லை அவர்களை சாரும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது.




**02. நூல் :- எரியும் நட்சத்திரம்**
**நூலாசிரியர் :- மர்ஹூமா.**
**ஷஹ்னா ஸப்வான்**
**வகை :- கவிதை**
**வெளியீட்டகம் :- ஸ்கை தமிழ்.**
**ஊடக வலையமைப்பு**
**வெளியீடு :- இளம் தாரகையின்**
**தூரிகை குழுமம் பக்கங்கள் :- 113**

தர்கா நகரை பிறப்பிடமாகக் கொண்டு சமூக வலைத்தளங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தமது கவித்துவ சிந்தனையை வெளிக்காட்டிய பின்னர் துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினராக கடமையாற்றி நம்மை விட்டு பிரிந்து சென்ற ஊதாப்பூ மர்ஹூமா ஷஹ்னா சப்வான் அவர்கள் தொகுத்து ஆயத்தப்படுத்திய நூல் நூலுருப் படுத்தப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் தர்கா நகரில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு இந்த நூலை வெளியீடு செய்து வைத்த போதிலும் இது நூலுரு படுத்தப்பட்டு வெளி வருவதற்கு இளம் தாரகையின் தூரிகை குழும உறுப்பினர்கள் அளப்பெரும் பணியாற்றி இருக்கிறார்கள்.

நூலாசிரியரின் கன்னி நூலாக வெளிவந்த இந்த நூல் ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு மொத்தமாக 64 கவிதைகள் கொண்டதாக காணப்படுகிறது. இதில் எழுத்துலகம், மனதோடு கொஞ்சம், நேசம் , இஸ்லாம், விருப்பம், குடும்பம், என அவை பாகப்பிரிவினை செய்யப்பட்டு கவிதைகள் தரவு படுத்தப்பட்டிருப்பது வாசகர்களுக்கு கூடுதல் ஈர்ப்பை கொடுக்கும் என நம்பப்படுகிறது.

இந்த நூல் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருப்பதுடன் இன்னும் பலரை ஈர்க்கும் என நினைக்கிறேன்.

ஒரு எழுத்தாளன் மரணிப்பதில்லை அவன் எழுத்துக்கள் உலகில் உலா வருகின்ற போதுகளில் எனும் கருத்தை இந்த நூல் வலுப்படுத்துகிறது.




**03. நூல் :- வில்லோடு வா**
**வெண்ணிலா**
**நூலாசிரியர் :- வி. அபிவர்ணா**
**வகை :- கவிதை**
**வெளியீட்டகம் :- விஜய் பதிப்பகம்**
**வெளியீடு :- 184**
**பக்கங்கள் :- 118**
**கவிதைகள் :- 80**

கவி பற்றுதலும் கவிதை மீது காதல் உணர்வு கொண்டவருமான இளம் கவிதாயினி முல்லை தீவு மூங்கிலாறு பிரதேசத்தை உடைய வி . அபிவர்ணா அவர்கள் எழுதிய கன்னி நூல் இதுவாகும்.

மொழி, இயற்கை, அன்பு, மனித மனம், பிறப்பு, இறப்பு, அழகியல், அன்றாட செயற்பாடுகள், காதல், ஊர் பற்றுதல், துணிச்சல், போன்ற பல்வேறு உணர்வுகளோடு இந்த நூலில் கவிதைகள் எழுதப்பட்டிருக்கிறது.

மொழியின் மீது பற்றுதல் கொண்டதனால் சொற்களை தன் பாணிக்கு ஏற்ற போல் எப்படியும் வசைத்துவிட முடியும் என்பதற்கு இந்த நூல்

சான்றாகவே அமைகிறது இதில் கவிதாயினி அவர்கள் சொற்களை கோர்வை செய்கின்ற விதமும் சொற்களை கையாளுகின்ற யுக்தியும் பேசு பொருளாகவே இருக்கிறது.

அதுமட்டுமல்லாது நேர்மறை சிந்தனைகளை உருவாக்குகின்ற விதத்தில் அமைந்த இந்த கவிதைகள் எழுத்தின் முதிர்ச்சியையும் வாசிப்பின் பற்றுதலையும் அழகாக பிரஸ்தாகம் செய்கிறது.

கவிதைகள் மீது பற்றுதல் காதல் கொண்டவர்கள் படிக்க வேண்டிய மிக அழகான உணர்வு ரீதியான தத்துவங்கள் நிறைந்த நூல் இது என நம்புகிறேன்.




**04. நூல் :- கார்த்திகை மாலதி வியாழன் 26**
**நூலாசிரியர் :- எழுத்தாளர் ஆகாஷ்**
**வகை :- திரிலிங் நாவல்**
**வெளியீட்டகம் :- கிழக்குக்கரை வெளியிட்டகம்**
**வெளியீடு :- 01**
**பக்கங்கள் :- 42**


மருதமுனையை புறப்படமாகக் கொண்ட இளம் எழுத்தாளர் சிறந்த வாசகர் ஆகாஷ் அவர்களின் கன்னி நூலாக வெளிவந்த இந்த நூல் துணிச்சல் மிக்க பிரபல்யமான எழுத்தாளர் "மாலதி" எதிர்கொள்ளும் சமூகவியல் சார்ந்த பிரச்சினைகள் அச்சுறுத்தல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நகர்ந்து செல்லும் க்ரைம் திரில்லர் நாவலாகும்.

"மாலதி" எனும் கதாபாத்திரத்தின் ஒவ்வொரு அங்க அசைவுகளும் மிக நேர்த்தியாக இந்த நாவல் ஊடாக பிரஸ்தாபிக்கப்படுவதற்கு அதன் அட்டை படத்தில் காணப்படும் மாலதியின் ஸ்கூட்டர் சான்று பகர்கிறது.

குறித்த இந்த நாவல் வாசகர்கள் மத்தியில் மிக பாரியதொரு வரவேற்பை பெறும் என்பதை மறுத்துவிட முடியாது.



**கவிப்பொய்கை**
**ஜவ்ஸன் அஹமட்**
**துணிந்தெழு சஞ்சிகை ஆசிரியர் குழு உறுப்பினர்**



# 2024 - பாரிஸ் ஒலிம்பிக் போட்டி பற்றிய சிறப்பு தொகுப்பு



ஒலிம்பிக் போட்டியின் தடகள விளையாட்டுக்கான தடங்கள் வழக்கமாக செந்நிறத்தில் இருக்கும். ஆனால், இந்த ஒலிம்பிக் போட்டியில் இதுவரையில் இல்லாத ஒரு திருப்பமாக முதன்முறையாக, தடகள போட்டியின் தடங்கள் ஊதா நிறத்தில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் 33 ஆவது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிசில் எதிர்வரும் ஜூலை மாதம் 26ம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

133 நாடுகளை சேர்ந்த சுமார் 10500 வீர, வீராங்கனைகள் 320 போட்டிகள் அடங்கிய 32 பிரிவு விளையாட்டுகள் என்று 15 நாட்கள் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒலிம்பிக் குறித்த செய்திகளை உலகெங்கிலும் கொண்டு செல்ல அங்கீகரிக்கப்பட்ட 20,000 ஊடகவியலாளர்கள் பிரான்ஸ் வர இருக்கின்றனர்.

PARiS 2024



தொடக்க நிகழ்ச்சிக்கான அணிவகுப்பு, வரலாற்றிலேயே முதல் முறை நதியில் நடைப்பெற உள்ளது. இந்த அணிவகுப்பு, தொடக்க போட்டி நடைப்பெறும் மைதானத்திற்கு வெளியே உள்ள சென் நதியில் நடத்தப்படும் என்று தெரிகிறது.



வழக்கமாக ஒலிம்பிக் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறுகிறதோ அந்நாட்டின் சிறப்பம்சங்களை பிரதிபலிக்கக்கூடிய மஸ்கட் எனப்படும் ஒலிம்பிக் சின்னங்கள் அறிமுகப்படுத்தப்படும்.



மேத்யூ லெஹானியுர் என்ற வடிவமைப்பாளரால் வடிக்கப்பட்டு, பிரான்ஸில் உள்ள ஆர்செலர் மிட்டால் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. சுமார் 2000 டார்ச்சுகள் உருவாக்கப்பட்டு இந்த ஒலிம்பிக் தீபங்கள் சமத்துவம், நீதி, அமைதி ஆகியவற்றை நோக்கமாக கொண்டுதான் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# எப்போதும் இளமையாகவே இருக்கணுமா?

## அப்போ இந்த 8 பழக்கங்களை தவிர்க்கவும்..!

சிலர் தங்கள் வயதை விட வயதானவர்களாக இருப்பதை பார்த்திருப்போம். சில பெண்களின் முகத்தில் வயதுக்கு முன்னரே முதுமை தோன்றத்தை அடைகிறார்கள். அதே நேரத்தில் சில பெண்கள் தங்கள் வயதை விட 10 வயது இளமையாக இருக்கிறார்கள். இதற்கு காரணம் சரியான சரும பராமரிப்பு, ஹார்மோன் சமநிலையின்மை, மன அழுத்தம் மற்றும் சுகாதார நிலைமைகள் ஆகியவையும் இதில் அடங்கும்.

எப்போதும் இளமையான சருமத்தைப் பாதுகாக்க தவிர்க்க வேண்டியவை என்னென்ன? என்பதை பற்றி இந்த பதிவில் தெரிந்துக் கொள்ளலாம்..

### 1. நன்றாக தூங்குவது

தூக்கமின்மை உடலின் இயற்கையான பழுதுபார்க்கும் செயல்முறைகளை சீர்குலைக்கிறது. இது சருமத்தின் நெகிழ்ச்சித்தன்மையை இழக்கச் செய்யும் மன அழுத்த ஹார்மோன்களின் அளவு அதிகரிப்பதற்கும் வழிவகுக்கிறது. கூடுதலாக, இது நச்சுகளை எதிர்த்துப் போராடும் உடலின் திறனை பலவீனப்படுத்துகிறது. இந்த வாழ்க்கை முறை தோல் தொய்வு, கருமையான வட்டங்கள் மற்றும் சுருக்கங்களை ஏற்படுத்துகிறது. இளமை தோற்றத்தையும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் பராமரிக்க தரமான தூக்கத்திற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். தினமும் குறைந்தது 7-8 மணிநேரம் தூங்க வேண்டும்.

### 2. மது பழக்கத்தை தவிர்க்கவும்

அதிகப்படியான ஆல்கஹால் உட்கொள்வது உங்கள் வயதை அதிகமாக்கும். ஏனெனில் இது சருமத்தை நீரிழப்பு செய்கிறது, வீக்கத்தை ஏற்படுத்துகிறது மற்றும் கொலாஜன் உற்பத்தியைக் குறைக்கிறது. இந்த காரணிகள் முன்கூட்டிய சுருக்கங்கள், மந்தமான மற்றும் சீரற்ற தோல் தொனிக்கு வழிவகுக்கும்.

### 3. நீரிழப்பு

நிறைய தண்ணீர் குடிப்பது சருமத்தின் ஆரோக்கியத்தை பராமரிக்கும் திறவு கோலாகும். நீரிழப்பு உயிரியல் முதுமையை விரைவுபடுத்துவது மட்டுமல்லாமல் நாள்பட்ட நோய்களின் அபாயத்தையும் அதிகரிக்கிறது. ஆரோக்கியமான உடலை பராமரிக்க தினமும் குறைந்தது 7-8 கிளாஸ் தண்ணீர் குடிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

## 4. உடற்பயிற்சி இல்லாமை

வழக்கமான உடற்பயிற்சி உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது, இதன் விளைவாக தோல் பிரகாசம் அதிகரிக்கிறது. வழக்கமான உடற்பயிற்சியானது ஆரோக்கியமான மற்றும் அதிக சுறுசுறுப்பான வாழ்க்கையை வாழ உதவுகிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. மாறாக, உடற்பயிற்சியின்மை உடல் பருமன், நீரிழிவு, இதயம் தொடர்பான நோய்கள் போன்ற பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

## 5. புகைபிடித்தல்

நமது உடல் உறுப்புகளில் புகைபிடிப்பதால் ஏற்படும் தீங்கான விளைவுகள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், அதன் விளைவுகள் வயதான செயல்முறைக்கு நீட்டிக்கப்படுகின்றன. மேலும் உடலில் அழற்சியின் அளவை உயர்த்துகின்றன. இந்த வீக்கம் கொலாஜன் மற்றும் எலாஸ்டின் புரதங்களை சேதப்படுத்துகிறது, இது சுருக்கங்கள், நேர்த்தியான கோடுகள் மற்றும் மந்தமான நிறத்தை உருவாக்க வழிவகுக்கிறது. தோல் ஆரோக்கியம் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வைப் பாதுகாக்க புகைபிடிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

## 6. சூரிய வெளிப்பாடு

சூரியனின் புற ஊதா (UV) கதிர்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவது உங்கள் சருமத்தின் நெகிழ்ச்சித்தன்மையை அழிக்கிறது. இதனால் அது சுருக்கங்கள் மற்றும் தொய்வுகளுக்கு ஆளாகிறது. இது மட்டுமல்லாமல், இந்த தீங்கு விளைவிக்கும் கதிர்களை நீண்ட நேரம் வெளிப்படுத்துவது தோல் புற்றுநோயின் அபாயத்தை கணிசமாக அதிகரிக்கிறது. உங்கள் சருமத்தை இளமையாகவும், புள்ளிகள் இல்லாமலும் வைத்திருக்க, வெளியே செல்வதற்கு முன் சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துங்கள்.

எளிய ஃபேஷன் குறிப்புகள் மூலம் உங்கள் ஸ்டைலை உயர்த்துவது எப்படி?எளிய ஃபேஷன் குறிப்புகள் மூலம் உங்கள் ஸ்டைலை உயர்த்துவது எப்படி?

## 7. மன அழுத்தம்

மன அழுத்தம் என்பது முதுமைக்கு ஒரு வேகமான வழியாகும். அறியப்பட்ட உடல்நல பாதிப்புகளுக்கு அப்பால், மன அழுத்தம் உங்கள் சருமத்தை மங்கச் செய்யும் வீக்கத்தைத் தூண்டுகிறது மற்றும் உங்கள் சரும செல்களை முன்கூட்டியே முதிர்ச்சியடையச் செய்கிறது. எனவே, தியானம், யோகா அல்லது பொழுதுபோக்குடன் இளமைப் பொலிவு மற்றும் உயிர்ச்சக்தியை அப்படியே வைத்திருக்கவும்.

## 8. ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம்

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை இழந்து, தீங்கு விளைவிக்கும் பொருட்களை ஏற்றுவதன் மூலம் வயதானதை விரைவாகக் கண்காணிக்கலாம். மோசமான ஊட்டச்சத்து தோலின் வயதை துரிதப்படுத்துகிறது. மந்தமான தன்மை, சுருக்கங்கள் மற்றும் நெகிழ்ச்சித்தன்மையை இழக்கிறது. கூடுதலாக, அதிகப்படியான சர்க்கரை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் வீக்கத்திற்கு வழிவகுக்கும், மேலும் வயதான செயல்முறையை விரைவுபடுத்துகிறது. ஒரு சீரான, ஊட்டச்சத்து நிறைந்த உணவை ஏற்றுக்கொள்வது இளமை நிறத்தையும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்த சருமத்தை வளர்க்கும்.



# புர்ஜ் கலீஃபாவில் விளம்பரம் செய்ய கட்டணம் எவ்வளவு? என்னென்ன விதிமுறைகள் தெரியுமா?



**துபாயில் உள்ள புர்ஜ் கலீஃபாவில் விளம்பரம் செய்ய எவ்வளவு செலவு ஆகும் தெரியுமா? தெரிந்தால் இவ்வளவு செலவா செய்றாங்கன்னு ஷாக் ஆகிடுவீங்க!** அதுவும் இந்த கட்டணம் ஒரு முறை திரையிட மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

துபாயில் உலகின் மிக உயரமான கட்டடமாக புர்ஜ் கலீபா உள்ளது. இங்கு உலகின் முக்கிய நிகழ்வுகளும் வெளிநாட்டு தலைவர்கள், அமைச்சர்கள் வரும் போது அவரவர் நாடுகளின் சிறப்புகள் அடங்கிய காட்சிகள் ஒளிபரப்புவது வாடிக்கை. உலக தலைவர்கள், அமைச்சர்கள் வந்தால் ஐக்கிய அரபு அமீரக அரசே அந்தந்த நாடுகளின் சிறப்பை விளக்கி அவர்களை கவுரவப்படுத்தும். இதே தனிநபர்கள் இந்த கட்டடத்தில் ஏதேனும் ஒளிபரப்ப வேண்டுமானால் 3 நிமிடங்களுக்கு இந்திய மதிப்பில் சுமார் 57 லட்சம் ரூபாயை கட்டணமாக செலுத்த வேண்டும்.

அதுவே அந்த விளம்பரம் வார இறுதி நாட்களில் இரவு 8 மணி முதல் இயங்கத் திட்டமிடப்பட்டிருந்தால் அதற்கு 79 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டும். இரவு 10 மணி வரை ஒரு வார இறுதி நள்ளிரவுக்கான செலவு 1.13 கோடி ரூபாயாகும். இரவு 7 மணிக்கு மேல் விளம்பரம் ஒளிபரப்பினால் ரூ. 2.27 கோடி செலவாகும். புர்ஜ் கலீபாவின் விளம்பரங்களை நிர்வகிக்கும் நிறுவனம் துபாயில் உள்ள முல்லன் லோவ் மெனா ஆகும். இந்த புர்ஜ் கலீபாவின் உரிமையாளர் எமார் பிராப்பர்டீஸ். இவரிடம் ஒவ்வொரு விளம்பரத்திற்கும் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அவருடைய அனுமதியின்றி அந்த கட்டடத்தில் ஒரு விளம்பரம் கூட வெளியிடப்படமாட்டாது.

இத்தகைய தலையை சுற்றும் இந்த கட்டணத்தை செலுத்தி இந்தி நடிகர் ஷாரூக் கான் தனது பிறந்த நாளுக்கு லேசர் ஷோ ஒளிபரப்பச் செய்தார். அது போல் நடிகர்கள் ரன்வீர் கபூர், தீபிகா, துல்கர் சல்மான் உள்ளிட்டோரும் இந்த புர்ஜ் கலீபா கட்டடத்தில் லேசர் ஷோக்களை தங்கள் சொந்த செலவில் ஒளிபரப்பியுள்ளனர்.



# 20 ஆண்டுகளாக எந்த வேலை தராமல் முழு சம்பளம் கொடுத்த பிரான்ஸ் நிறுவனம் பெண் போட்ட விசித்திர வழக்கு

20 ஆண்டுகளாக எந்த வேலை தராமல் முழு சம்பளம் கொடுத்திருக்கிறது பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு நிறுவனம். அந்த நிறுவனத்திற்கு எதிராக சம்பளம் வாங்கிய பெண் வழக்கு போட்டது தான் ஹைலைட்டாக குறிப்பிட வேண்டிய விஷயம் ஆகும்.

இந்த உலகில் பல்வேறு வினோதங்கள் தினமும் அரங்கேறுகின்றன. அப்படி ஒரு சம்பவத்தை பற்றித்தான் பார்க்க போகிறோம். சம்பளமே ஒழுங்காக தராமல் வேலை வாங்கும் நிறுவனங்களுக்கு மத்தியில் ஒரு பிரான்ஸ் நிறுவனம் தனது பணியாளரின் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவருக்கு 20 ஆண்டுகளாக எந்த வேலையும் கொடுக்காமல் முழு சம்பளம் தந்து வந்திருக்கிறது.

இதில் குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம் என்னவென்றால் தனக்கு நிறுவனம் வேலையே தராமல் சம்பளம் தருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த பெண் நீதிமன்றம் வரைபடியேறி உள்ளார். யாராவது இப்படி செய்வார்களா என்ற கேள்வியும், ஆச்சர்யமும் வந்தால், அது தான் உலகின் நடக்கும் வினோதங்களில் ஒன்று.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லாரன்ஸ் வான் என்ற பெண் 1993-ம் ஆண்டு ஒரு டெலிகாம் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்திருக்கிறார். அவருக்கு உடலில் பகுதி பக்கவாதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் லாரன்ஸ் வான் வலிப்புநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் அந்த நிறுவனம் லாரன்ஸ் வானுக்கு ஏற்ற வேலையை தொடக்க காலத்தில் வழங்கி உள்ளது.

ஆனால் லாரன்ஸ் வான் கடந்த 2002-ம் ஆண்டு, பிரான்ஸில் உள்ள வேறு பகுதிக்கு பணியிடம் மாற்றம் பெற்று சென்று விட்டார் அங்கு அவருக்க் ஏற்ற வேலையை அந்த நிறுவனம் வழங்கவில்லை.

அதாவது முன்னாடி வேலை செய்த இடத்தில் கொடுக்கப்பட்டது போன்ற பணியினை அந்நிறுவனம் லாரன்ஸ் வானுக்கு தரவில்லை. வேலையே செய்யாமல் தொடர்ந்து பல வருடங்களாக முழு சம்பளம் மாதம் மாதம் வாங்கியபடி லாரன்ஸ் வான் வாழ்க்கையை ஓட்டி வந்துள்ளார்..

இதனிடையே லாரன்ஸ் வான் வேலை பார்த்த நிறுவனத்தின் பெயர் கடந்த 2013-ல் ஆரஞ்ச் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. புதிதாக பெயர் மாறியது போல் நிறுவனமும் மாறி தனக்கு பணி வழங்கும் என்று காத்திருந்த லாரன்ஸ்வானுக்கு எந்த பணியும் அதன்பிறகும் வழங்கப்படவில்லை.. சும்மாவே 20 வருடங்களுக்கு மேல் இருந்த லாரன்ஸ் வானுக்கு முழு சம்பளத்தை மாதம் மாதம் ஆரஞ்ச் நிறுவனம் வழங்கி வந்திருக்கிறது.

முதலில் இதை ஏற்றுக்கொண்டாலும், ஒரு கட்டத்தில் சம்பளம் வாங்கிவிட்டு வேலை செய்யாமல் இருப்பதற்கு லாரன்ஸ் வானும் மனம் ஒப்புக் கொள்ளவில்லை.. கேட்டுக் கேட்டுபார்த்த அவர் ஒரு கட்டத்தில் வாசன்ஹோவ் கோர்டில் தனது நிறுவனமான ஆரஞ்சுக்கு எதிராக வழக்கே போட்டுவிட்டார்.

இந்த குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்த ஆரஞ்ச் நிறுவனம், "பெண் பணியாளர் லாரன்ஸ்வானின் உடல் நிலையை கருத்தில் கொண்டு, அவருக்கு ஏற்ற பணிச் சூழலை உருவாக்குவது குறித்து நாங்கள் உரிய முறையில் பரிசீலித்தோம். ஆனால், அவருடைய மருத்துவ விடுப்பு இந்த செயல் முறையை எங்களுக்கு மிகவும் கடினமாக்கிவிட்டது" என்று விளக்கம் அளித்துள்ளது. 20 ஆண்டுகளாக வேலை தராமல் சம்பளம் கொடுக்கும் நிறுவனத்துக்கு எதிராக பெண் வழக்கு போட்டிருப்பது பலருக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தி உள்ளது. மனசாட்சி உறுத்தியதால் அவர் இப்படி செய்திருப்பார் என்று சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

# என் இனியவள்

எத்தனை துயரங்கள்
உனக்குள் உள்ள போதிலும்
என் தலை கோரி
எனக்காய் ஆறுதல்
கூறிடும்_ பாசக்காரி

எதுவித எதிர்ப்பார்ப்புமற்ற
தூய
அன்பு உன்னிடத்தில் மட்டும்
இறைவன் படைத்திட்டானடி......

தோழியாய்.....
சகோதரியாய்......
சண்டையிடும் பொழுதுகளில்
கூட உன் சிரிப்பு மறைவதில்லை

நீ அறியா இரகசியங்கள்
என் வாழ்வில் ஏதுமில்லை
என்னை விட வயதில்
சிறியவளாயினும்
குணத்தால்
பெரியவள் நீ

உன் போன்ற அற்புதமான
உள்ளங்களை
கண்டு கொள்தல்
கடினமே......

இன்று
போல் என்றும்
மகிழ்ந்து வாழ்!
பிறரை
மகிழ்வித்து வாழ்!

**பாத்திமா சமீஹா**



# இரத்தினபுரி பிரதேசத்தில் சிறந்த ஒரு ஆளுமையின் ஓய்வு

**அதிபர் ஜனாப் எம். எஸ். எம். மில்ஹான். சிறந்த ஆளுமை மிக்க ஒரு நபர்...! எவ்வளவு சவால்கள் வந்தாலும் எடுத்த காரியத்தை மிகவும் தைரியமாக செய்து முடிப்பவர்...! எந்தவொரு வேலையையும் நேர்த்தியாக செய்பவர்...! மக்கியா வரலாற்றில் மற்றுமின்றி இரத்தினபுரி பிரதேசத்தில் தனது சேவையை நிலைநிறுத்தியவர்...! இரத்தினபுரி அல் - மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஆரம்பமும் அதிபர் ஜனாப் எம்.எஸ்.எம் மில்ஹான் அவர்களின் சேவையும்.**

இரத்தினபுரி நகரத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் பிள்ளைகள் இலவசக் கல்வியின் ஆரம்பம் தொட்டு வேற்று மத பாடசாலைகளில் கல்வி கற்று வந்துள்ளனர். 1960 காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் மதப் பெரியவர்கள் மற்றும் கல்விமான்கள் ஒன்று கூடி இப்பிரதேசத்திற்கு முஸ்லிம் பாடசாலை ஒன்று பெற்றெடுக்க வேண்டும் என்று எடுத்த முடிவின் பலனாக 1963 காலப்பகுதியில் இலங்கை பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சராக இருந்த அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களை சந்தித்து பல முறை பேச்சி வார்த்தை நடாத்தியதன் பலனாக இ/இரத்தினபுரி தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று வந்த 25 மாணவ, மாணவிகளையும் 04 ஆசிரியர்களையும் வேறாக பிரித்தெடுத்து அதே பாடசாலையின் ஒரு பகுதியில் இ/அல் மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்ட ஒரு பாடசாலையை 1963.09.01 ம் திகதி இரத்தினபுரி வாழ் முஸ்லிம் மக்களுக்கு கையளிக்கப்பட்டது.

இப்பாடசாலைக்கு ஜென்னத் மஸ்ஜித் அருகில் மக்காவில் இருந்து வந்து அடங்கப்பட்டுள்ள அவ்லியாக்களின் தலைவரான மக்கிவலியுள்ளாவின் பெயரையே அமைச்சர் அல் ஹாஜ்



பதுயுதீன் மஹ்மூத் அவர்களால் சூட்டப்பட்டுள்ளது. இப்பாடசாலையின் முதற் கடமை பொறுப்பாசிரியராக ஜனாப் ஏ.எச்.எம் அபூசகீட் அவர்கள் கல்வித் திணைக்களத்திளனால் நியமிக்கப்படுள்ளார். 1963.09.01 முதல் 1976.03.31 முதல் கிட்டத்தட்ட 13 வருடங்களுக்குள் 11 அதிபர்கள் இப்பாடசாலையை பொறுப்பேற்றுள்ளனர். இப்பாடசலையின் 12 வது அதிபராக எஹலியகொட இ/அல் அக் ஷா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இருந்து 1976.04.01 ம் திகதி இடமாற்றம் பெற்று வந்துள்ள மர்ஹூம் எம்.எஸ்.எம். சிறாஜுதீன் அவர்கள் தனது கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

அவரின் சேவைக் காலத்தில் முதற்கட்டமாக 1976.04.28 ம் திகதி இப்பாடசாலை கல்வி அமைச்சினால் க.பொ.த (உ/த) வணிகப்பிரிவு ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் தரம் 2 மட்டத்தில் இருந்து தரம் 1C ஆக தரம் உயர்தப்பட்டுள்ளது ஒரு விஷேட நிகழ்வாகும். நாளுக்கு நாள் மாணவர்களின் வரவு கூடிக் கொண்டு போக இப்பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டிருந்த மண்டபத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாகவும் இப்பாடசாலைக்காக வேறாக தனி ஒரு இடம் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும், இப்பாசாலையை பெற்றெடுத்த குழுவைச் சேர்ந்தவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அதிபரின் தலைமையில் கூடி நடாத்திய பல பேச்சுவார்த்தை சுற்றுக்களின் முடிவில் அன்றைய அரசியல் பிரமுகர்களின் உதவியுடன் தற்போது பாடசாலை அமைந்துள்ள 01 ஏக்கர் 15.8 பர்சர்ஸ் பரப்பளவுள்ள இக் காணி 1985.02.13 ம் திகதி அரசினால் சுவீகரிக்கப்பட்டு பாடசாலைக்கு ஒப்படைக்கப்பட்டது.

இக்காணியை பெற்றெடுத்த பாடசாலையின் 12 வது அதிபர் மர்ஹூம் எம்.எஸ் சிராஜுதீன் அவர்களின் முயற்சினால் மற்றும் அதற்கு உதவிய சகல உறுப்பினர்களினதும் உதவியால் பெற்ற மாபெறும் வெற்றி எனக் குறிப்பிடலாம். மர்ஹூம் எம்.எஸ் சிராஜுதீன் அவர்களின் மூன்றாம் கட்ட வேலையாக இக்காணியில் அவசரமாக ஒரு கட்டிடத்தை நிர்மாணித்து இப்பாடசாலையை புதிய இடத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காக பல கூட்டங்களை நடாத்தி எடுத்த முடிவின் பயனாக இரத்தினபுரி வாழ் முஸ்லிம் தலைவர்களின் உதவியால் 1985.10.25 ஆம் திகதி புதிய மூன்று மாடி கட்டிடம் ஒன்றுக்காக அடிக்கல் நாட்டப்பட்டு 1987ம் ஆண்டு 15 ஆம் திகதி இக்கட்டத்தின் முதலாம் மாடி திறந்து வைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 1987.01.19 ஆம் திகதி பாடசாலையின் தரம் 3 முதல் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் புதிய கட்டடத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் தரம் 1,2 வகுப்புகள் ஜன்னத் ஜூம்மா பள்ளிவாசலின் ஒரு பகுதியில் நடத்தப்பட்டு வந்தது. தரம் 01 மற்றும் தரம் 02 இரு வகுப்புகளையும் புதிய பாடசாலை காணி அமைந்துள்ள இடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற பிரச்சினையை ஒன்று கூடி கதைத்து அதிபர் மற்றும் அபிவிருத்திச் சங்க குழு அங்கத்தவர்கள் இப்பிரதேச தலைவர்களின் ஒருவரான மர்ஹூம் அல்ஹாஜ் நஸ்ருதீன் அவர்கள் 1990.10.23 ஆம் திகதி 60 × 20 பரப்பளவு உள்ள ஒரு மண்டபத்தை தனது சொந்த செலவில் நிர்மாணித்து இரத்தினபுரி வாழ் முஸ்லிம் சிறார்களின் கல்வித் தேவைக்காக கையளித்து வைத்தார்.

இத்தினம் புதிய மண்டபத்தின் 1990 ஆம் வருடத்திற்கான மீழாத் விழாவும் பரிசளிப்புகளும் சமூகம் தந்த பிரமுகர்களினால் நடாத்தப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும். இப்பாடசாலையின் 13 வது அதிபராக இ/ரபுக்கந்த தமிழ் வித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்று வந்த ஜனாப் எஸ்.ஏ.ஏ. இப்ராஹிம்




அவர்கள் 1991.01.01 முதல் தனது சேவையை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இவரின் சேவை காலத்தில் பாடசாலைக்கு குறைபாடாக இருந்து வந்த பாடசாலை காணியைச் சுற்றி மதில் கட்டும் பணி 1994 டிசம்பர் காலப்பகுதியில் செய்தி முடிக்கப்பட்டு இருந்தது மற்றும் 90×25 பரப்பளவு கொண்ட 3 மாடி கட்டிடம் ஒன்றின் முதல் மாடி கட்டிடப் பணிகள் 1997.08.05 ஆம் திகதி முடிக்கப்பட்டு பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. அத்துடன் இம்மூன்று மாடி கட்டிடத்தின் இரண்டாம் மாடி கட்டிடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதிபர் மர்ஹூம் எஸ்.ஏ.ஏ இப்ராஹீம் அவர்கள் 1998.02.02 ம் திகதி பலங்கொட கல்வி வலையத்திற்கு உட்பட்ட இ/பல/பளான தமிழ் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இக்காலப் பகுதியில் பாடசாலையில் 318 பிள்ளைகளும் 13 ஆசிரியர்களும் சேவையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் 14 வது அதிபராக சபரகமுவ மாகண கல்வி திணைக்களத்தின் உதவி கல்வி பணிப்பாளர் தமிழில் மருகுமலஹாசன் எம்.எஸ்.எம் ஹுசைன் அவர்களின் சிபாரிசின் பேரில் நிவித்திகல வலயத்துக்கு உட்பட்ட தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய ஜனாப் எம் எஸ் எம் மில்ஹான் அவர்கள் தனது 34 ஆவது வயதில் தனது ஒன்பது வருட கால சேவையின் பின் 1998.02.09ஆம் திகதி இப்பாடசாலையை பொறுப்பேற்றார். இவர் இப்பாடசாலையில் பொறுப்பேற்கும் போது பாடசாலையின் கல்வி மட்டம் மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டது. தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சை சித்தி வீதங்கள் பூச்சிய நிலையில் காணப்பட்டது மட்டுமல்லாது இப்படசாலையின் 12 வது அதிபர் மர்ஹூம் சிராஜுதீன் அவர்களால் 1972.04.28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த உயர்தர வணிக பிரிவும் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது. இது மட்டுமல்லாது ஆங்கிலம், விஞ்ஞானம், இஸ்லாம், வணிகம், சமூக கல்வி போன்ற பாடங்களுக்கு மாத்திரமே ஆசிரியர்கள் காணப்பட்டதுடன் முக்கிய பாடங்களான கணிதம் , தமிழ் பாடமும் வேறு எந்த பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இல்லாத நிலையில் காணப்பட்டது. இவர் கையில் கிடைத்த முதலாவது க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறு 1997 டிசம்பர் மாதம் பரீட்சைக்கு தோற்றிய 29 மாணவ, மாணவிகளின் பெறுபேறுகள் 1998.05.29 கிடைத்தது ஒரு மாணவ, மாணவியும் சித்தி அடைந்து இருக்கவில்லை.

இந்த மாபெரும் சவாலுக்கு முகம் கொடுக்க ஆயத்தமான அதிபர் ஜனாப் எம் .எஸ். எம் மில்ஹான் அவர்களின் முதலாவது இலக்காக இருந்த விடயம் 1998 டிசம்பர் மாதம் க.பொ.த (சா/த) பரீட்சையில் முகம் கொடுக்க இருக்கும் 23 மாணவ மாணவிகளின் 25% பிள்ளைகளையாவது சித்தி அடைய வைத்து மூடப்பட்டிருந்த க.பொ.த உயர்தர பிரிவின் கலை பிரிவையாவது ஆரம்பித்து வைப்பதாகும். இதற்காக பல முயற்சிகளை கையாண்டு அவரின் நண்பன் திரு. துரைசிங்கம் அவர்களை அழைத்து கணித ஆசிரியரின் உதவியை பெற்று எடுத்த முயற்சியின் பலனாக 1998 டிசம்பர் மாதம் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு தோற்றிய 23 மாணவ மாணவிகளில் கா.பொ.த உயர்தர கற்கைக்காக 7 மாணவ மாணவிகளின் தேர்ச்சி பெற்றனர் 1999.05.11 பெறுபேரின் அடுத்தகட்ட வேலையாக 1999 ஆகஸ்ட் மாதம் கல்வி அமைச்சர் திணைக்களத்தின் பூரண அனுமதியுடன் சித்தி அடைந்த ஏழு மாணவிகளின் வைத்து பாடசாலையில் அன்று கடமைகளில் இருந்து ஆசிரியர்களையே வைத்து பொருளியல் புவியியல்





இஸ்லாம் மற்றும் தமிழ் பாடங்களை கற்பித்து 2001 ஆம் ஆண்டு பரீட்சைக்கு அனுப்பி அதில் மூன்று மானமாக சித்தி பெற்றனர்.

காணப்பட்ட முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்களை தேடி பெற்றெடுத்து வருடா வருடம் தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, கா.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் கூடிக் கொண்டே சென்ற விடயம் பாடசாலை சமூகத்திற்கு மகிழ்ச்சியையும். மாணவர் வருகை அதிகப்படுத்தவும் செய்தது. அதிபர் ஜனாப் எம். எஸ்.எம் மில்ஹாம் அவர்கள் பரீட்சை பெறுபேறு மாணவர் வரவு என்பவற்றை வருடத்திற்கு வருடம் அதிகப்படுத்தியது மட்டுமல்லாமல் பாடசாலைக்கு குறைபாடாக காணப்பட்ட அனைத்து வளங்களையும் அவரின் சுய முயற்சியை கொண்டு வருடா வருடம் துரிதப்படுத்திக் கொண்டே சென்றது கண்கூடாக கண்ட விடயமாகும். பாடசாலைக்கு வளங்களை பெற்றுக் கொள்வதில் அரசு வேகத்தில் இயங்கி அதிபர் ஜனாப் எம்.எஸ்.எம் மில்ஹான் அவர்கள் முதலாவது வேலை திட்டமாக 1997.09.08 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று மாடி இரண்டாம் கட்டிடத்தில் இரண்டாம் மாடி கட்டிடப் பணிகள் முடிவடைந்து 1999.03.09 திகதி மண்டபத்தை மாண, மாணவிகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒப்படைத்தார். அதைத் தொடர்ந்து அம்மாடி கட்டிடத்தின் மூன்றாம் மாடியை பெற்றெடுத்து அதன் கட்டிட நிர்மாண பணிகள் முடிவடைந்து.2003 .12 .17 ஆம் திகதி பொறுப்பேற்று பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒப்படைத்தார்.

பாடசாலைக்கு பிரதான மண்டபம் ஒன்று இல்லாததால் இக்கட்டடத்தின் மூன்றாம் மாடியை ஒரு பிரதான மண்டபமாகவே பெற்றெடுத்தது ஒரு விசேட அம்சமாகும் அது மாத்திரம் அல்லாமல் முஸ்லிம் பாடசாலை ஒன்றுக்கு கட்டாயமாக தொழுகைக்காக பள்ளிவாசல் ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும் என்ற நோக்கை கருத்தில் கொண்டு பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக அப்போது கடமையிலிருந்து அல்ஹாஜ் எம்.எஸ்.எம் ஃபாரூக் அவர்களுடன் இணைந்த பிரதேச தனவந்தர்களின் உதவியை பெற்று இருமாடி கட்டிடமாக பாடசாலைக்கு பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணித்தார். இப்பள்ளி வாசலின் மீதி நிர்மாண பணிகள்/பணிகளில் அல்ஹாஜ் நிசாம் அவர்கள் செய்து தந்ததும் ஒரு முக்கிய விடயமாகும் அது மட்டுமல்லாமல் பாடசாலையின் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கு சேர்த்து பாடசாலையில் குறைபாடாக இருந்த மலசல கூட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஃபாரூக் அவர்களுடன் சேர்ந்து அடுத்த முயற்சியின் பலனாக 1990 காலப்பகுதியில் மர்ஹூம் உசைன் அவர்களினால் பாடசாலைக்கு இரண்டு மலசல கூடங்களை பெற்றெடுத்துள்ளார்.

அதிபர் ஜனாப் எம்.எஸ்.எம் மில்ஹான் அவர்களின் சேவை காலம் இரத்தினபுரி அல் - மாக்கிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பொற்காலம் என்றே கூறலாம். பெறுபேறுகளை ஆய்வு செய்தல்...! தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு முதன் முறையாக 1963 ஆம் ஆண்டு முதல் தோன்றிய 1997 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 35 வருடங்களில் 12 மாணவ மாணவிகளை சித்தி அடைந்துள்ளனர். அதிபர் ஜனாப் எம். எஸ். எம் மில்ஹான் அவர்களின் சேவை காலமான 1998 முதல் 2023 வகையான 25 வருட காலநிலைக்குள் 77 மானமான சித்தி அடைந்துள்ளன. அதேபோன்று சாதரண தர பரீட்சைக்கு பாடசாலையிலிருந்து 1963 முதல் 1997 வரை 35 வருடங்கள் பரீட்சைக்கு தோற்றி 25 மாணவ, மாணவிகளை சித்தி அடைந்துள்ளனர்.

அதிபர் ஜனாப் எம். எஸ். எம் மில்ஹான் அவர்களின் சேவை காலமான 1998 முதல் 2022 வரை 25 வருட கால சேவையில் 440 மாணவ, மாணவிகள் சித்தியடைந்து

கா.பொ.த உயர்தரத்திற்கு அனைத்து பிரிவுகளுக்கும் தகுதி பெற்றுள்ளனர். 1963 முதல் 1998 வரை கிட்டதட்ட 35 வருடங்கள் வர்த்தக பிரிவு உயர்தரத்தில் பரீட்சைக்கு தோற்றி இரண்டு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அதன் பின் உயர்தர பிரிவு பாடசாலையில் மூடப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டது. சேவைக்கு வந்த பின் 2007 முதல் 2024 வரை வணிகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு வணிகப்பிரிவால் மீண்டும் பரீட்சைக்கு தோன்றிய 20+ மாணவர்களை சித்தி அடைய வைத்து பல்கலைக்கழக தகுதியை பெற்றுள்ளார்கள். அத்துடன் 1999 வருடம் க.பொ.த உயர்தர கலை பிரிவை ஆரம்பித்து 2001 ஆம் வருடம் தொடக்கம் 2024 ஆம் வருடம் வரை 450+ மாணவ, மாணவிகள் சித்தியடைந்து பல்கலைக்கழக தகுதி பெற்றுள்ளது ஒரு விஷேட அம்சமாகும் என குறிப்பிடலாம்.

தற்போது அநேக மாணவர்கள் அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வியை தொடர்ந்து பட்டம் பெற்றுள்ளதுடன் இன்னும் கல்வி கற்றுக்கொண்டும் இருக்கிறார்கள். கல்வியியற் கல்லூரிகள் மற்றும் டிப்ளோமாக்கள் செய்து கொண்டும் இருப்பரனை காணலாம். இது ஒரு பாரிய சமூக சேவை இரத்தினபுரி மண்ணில் கல்வியை உயிர்பித்தவர் என கூறலாம். ஆரம்பித்த காலம் முதல் ஒவ்வொரு தரத்திலும் ஒவ்வொரு வகுப்புகள் இருந்த போதும் வருடா வருடம் பிள்ளைகளின் வரவுகள் அதிகரித்ததன் காரணமாக கல்வி திணைக்களத்தின் அனுமதி உடன் ஒவ்வொரு தரத்திலும் இரண்டு வகுப்புகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அது மாத்திரம் அல்லாமல் இவரின் சேவை ஆரம்பத்தில் 300 மாணவ மாணவிகளையும் 13 ஆசிரியர்களை வைத்து தொடங்கிய முன்னேற்ற சேவை பயணத்தின் பயனாக இன்று கிட்டத்தட்ட 800 மாணவ மாணவிகள் 36 ஆசிரியர்களும் இப்படசாலையில் சேவையாற்றுகின்றனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுயமாக தேவையான பாடங்களுக்கு தேவையான 100 ஆசிரியர்களை பெற்றெடுத்து கிட்டத்தட்ட ஐந்து வருடம் பாடசாலையில் சேவைகளை பெற்ற பின் அவ்வாசிரியர்களுக்கு அவர்களின் சொந்த ஊருக்கே இடமாற்றங்கள் பெற்றுக் கொள்ளவும் உதவி செய்துள்ளார். ஜனாப் எம்.எஸ்.எம் மில்ஹான் அவர்கள் 25 வருட சேவை காலத்தில் இப் பாடசாலைக்கு குறைபாடாக இருந்த அனைத்து வளங்களையும்



அவரின் சொந்த முயற்ச்சியின் பலனாக பெற்றுக் கொடுத்துள்ளார் என்பது யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாத விடயம் எனக் கூறிக் கொள்ளலாம்.

இப்பாடசாலையின் 60 வருட வரலாற்றில் அதிபர் எம்.எஸ்.எம் மில்ஹான் அவர்களின் 26 வருட சேவையிலேயே பரீட்சை பெறுபேறுகள், மணவர்கள் அதிகரிப்பு, தேவையான அனைத்து ஆசிரியர்கள் வரவழைப்பு, பாடசாலைக்கு தேவைப்படும் அனைத்து வளங்களையும் பெற்றெடுத்தது மட்டுமல்லாது இப்பாடசலையை தேசிய பாடசாலையாக தரம் உயர்துவதற்கும் அயராது உழைத்த ஒரு மா மானிதர் என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெறுமிதம் அடைகின்றோம்.

இவரின் 60 வது வயதில் 2024.05.28 ம் திகதி ஓய்வு பெறுவது எமக்கும், இந்த ஊர் மக்களுக்கும், பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்திற்கும் பாரிய தாக்கத்தை உண்டு பன்னும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. திபர் எம்.எஸ்.எம் மில்ஹான் அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமையவும், அவர் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக இறுதிக்காலத்தை கழிக்கவும் அவருக்காகவும் அவரின் தேக ஆரோக்கியத்திற்காகவும் இறைவனை பிரர்த்திப்போம்.

அனைவர்சார்பாக...!

**முன்னாள் மக்கியா ஆசிரியர்.**
**மக்கியா பழைய மாணவர் சங்க செயலாளர்.**
**தற்போது இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர். எம்.எம்.எம் நுஸ்ஸாக் (SLTS MEd(R) )**

# தினக்குரல் உதவி ஆசிரியர் எம்.எச்.எப் ஹுஸ்னா அவர்களுடனான நேர்காணல்



### 1.உங்களது பூர்வீகம், அறிமுகம் என்பவற்றை எமது வாசகர்களுக்காக பகிர்ந்து கொள்ளுங்கள்?

காலியைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் ஆரம்பக்கல்வியை காலி, கிந்தோட்டை ஸாகிரா தேசியப் பாடசாலையிலும், பின்னர் (தரம் 9 இலிருந்து உயர்தரம் வரை) கொழும்பு 12 பாத்திமா மகளிர் கல்லூரியிலும் கற்றேன். குடும்பத்தின் கடைக்குட்டியாக இருப்பதால் எல்லோரினதும் அன்பு, அரவணைப்பு, வழிகாட்டல் என்பன எனக்கு உந்துசக்தியாக இருந்தது. நான் தொடர்ந்தும் ஊடகத்துறையில் பயணிக்க எனக்கு பக்க பலமாக இருந்தவர் எனது தாய் என்றால் மிகையாது. தொடர்ந்து 15 வருடங்களாக எந்த தடையுமின்றி அலுவலகம் போக எனது தாயே காரணம். சில வேளைகளில் குடும்ப சுமை காரணமாக நானே எனது நிறுவனத்திற்கு போக பின்னடிக்கும்போது என்னை ஊக்கப்படுத்தி, எனது பிள்ளைகளை அவர்கள் பார்த்துக் கொண்டு தொடர்ந்து பணி செய்ய வழிகாட்டும் ஒரு புனிதமானவளாக இருக்கின்றாள்.

அதற்கடுத்ததாக என் தோளோடு தோள் நின்று எனது பணிகளுக்கு தடை ஏதுமின்றி என்னை சுதந்திரமாக இயங்க வைக்கும் என் துணைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவள். ஆசிரியரான அஷ்ஷேஹ் எம்.ஏ ஜெம்சீத் நளீமி. திருமணத்திற்கு பின்னரும் நான் ஊடகப்பணியில் சிறப்புற,விருதுகளைப்பெற இவரின் அர்ப்பணிப்பு அளவிட முடியாதது.மூன்று சிறு பிள்ளைகளுடனும் நான் தொடர்ந்தும் பணி செய்வதற்கு எனது தாயிற்கு அடுத்து என் கணவரே காரணம்.

### 2.உங்களது பாடசாலை காலத்தில் ஊடகத்துறையில் தான் பணியாற்ற வேண்டும் என்ற இலட்சிய வேட்கை உங்களுள் இருந்திருக்கின்றதா?

ஆமாம், நிச்சயமாக...

எனது தந்தை இஹ்ஸானிய்யா அரபிக்கல்லூரி அதிபராக இருந்தவர் மர்ஹூம் அஷ்ஷேஹ்க் ஹுசைன் மௌலவி. எனது சகோதர,சகோதரிகள்



கல்வித்துறை,மருத்துவத்துறை,வர்த்தகத்துறையுடன் தொடர்புபட்டிருந்தார்கள். அதனால் எனக்கும் ஏதாவதொரு வகையில் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற வேட்கை இருந்தது. அதற்கு எனக்கு ஏற்ற துறை எதுவென நான் தேடினேன் . அப்போதுதான் ஊடகத்துறையை தெரிவு செய்தேன். நான் பாடசாலையில் படிக்கும் போதே அதற்காக என்னைத் தயார்படுத்திக் கொண்டேன்.

## 3.ஊடகத்துறையில் முதன்முதலாக இணைந்து கொண்ட உங்கள் அனுபவம் பற்றிக் கூற முடியுமா?

நான் கொழும்பு 12 பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் படிப்பை நிறைவு செய்த பின்னர் என்னை ஊடகத்துறையில் இணைத்துக்கொள்வற்காக, அதற்கு என்னை முழுமையாக தயார் படுத்துவதற்காக இலங்கை இதழியல் கல்லூரியில் இணைந்து கொண்டேன். அங்கு ஊடகத்துறை தொடர்பில் பயிலும் போது பயிற்சிக்காக தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்துக்கு அனுப்பப்பபட்டேன். அங்கு பயிற்சி பெறும்போது அப்போது பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த வீ.தனபாலசிங்கம் ,செய்தி ஆசிரியராக இருந்த கே.ஆர்.பி. ஹரன் (இப்போது பிரதம ஆசிரியர்) பிரதி செய்தி ஆசிரியராக இருக்கின்ற ரி.சிவகணேசன் (இப்போது செய்தி ஆசிரியர்) ஆகியோரின் கீழ் சிலவாரங்கள் பணிபுரியும் வாய்ப்புக்கிடைத்தது.

அக்குறுகிய காலத்திற்குள் அவர்கள் எமக்கு வழங்கிய பயிற்சி, ஆலோசனைகள் , சுதந்திரம். அவர்கள் என்மீது காட்டிய அக்கறை ,அணுகுமுறை எனக்கு மிகப்பெரும் பலத்தையும் நம்பிக்கையையும் நான் தொடர்ந்தும் தினக்குரலில் பணிபுரிய வேண்டும் என்ற ஆசையையும் ஏற்படுத்தியது. நான் பயிற்சியை நிறைவு செய்து மீண்டும் இதழியல் கல்லூரிக்கு சென்று ஊடகக்கற்கை நெறியை முழுமையாக பூர்த்தி செய்து விட்டு தினக்குரல் ஆசிரியர் பீடத்தில் 2009.01.05 ஆம் திகதி இணைந்து கொண்டேன்.

எனது ஊடகப்பணிக்கு ஆசிரியர் பீடத்தின் முழுமையான ஒத்துழைப்பு, ஆலோசனைகள் வழிகாட்டல்கள் என்பனவற்றை வழங்கியதுடன் மட்டுமன்றி நான் வயதிலும் ஊடக அனுபவத்திலும் மிகவும் சிறியவளாக இருந்தபோதும் என்னை நம்பி பிரதம ஆசிரியரும் செய்தி ஆசிரியரும் பொறுப்புக்களை ஒப்படைத்தனர். திடீரென ஒருநாள் என்னை அழைத்த பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம் அவர்கள் , " நீங்கள் ஊடகத்தில் ஒரு துறையை தெரிவு செய்து அதில் தீவிரகவனம் செலுத்துங்கள். அப்போதுதான் நீங்கள் ஒரு முழுமையான ஊடகவியலாளராக முடியும். எனவே நான் உங்களிடம் சுகாதாரம். சுற்றுசூழல் தொடர்பான பொறுப்பை ஒப்படைக்கின்றேன் . அதில் கவனம் செலுத்துங்கள் "என்று கூறிவிட்டு தினக்குரலில் இணைப்பிதழாக ஆரம்பிக்கப்படவிருந்த "நலம்தானா " என்ற மருத்துவ இதழுக்கான பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

அதே நேரம் செய்தி ஆசிரியர் கே.ஆர்.பி. ஹரன் அவர்கள்,"தினக்குரலில் நீங்கள் கிழக்கு மாகாண செய்திகளுக்கான பக்கத்தை நீங்கள் செய்யுங்கள்" எனக்கூறி அந்தப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். நலம்தானா ' மற்றும் கிழக்கு மாகாண செய்தி பக்கத்தை நான் சிறப்பாக செய்ய அப்போது பிரதி ஆசிரியராக இருந்த சிவகணேசன் அவர்கள் பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி என்னை மெருகூட்டினார்.

அதேவேளை ஞாயிறு தினக்குரலின் பிரதம ஆசிரியரான இராஜநாயகம் பாரதி அவர்கள் தான் ஞாயிறு தினக்குரலில் கட்டுரைகள் எழுத எனக்கு




சிறந்த களம் அமைத்துத் தந்ததுடன் சரியான வழிகாட்டல்களையும் வழங்கி என்னை ஊக்குவித்தார். அவர் எப்போதும் 'ஏதாவது கட்டுரைகள் எழுதுங்கள்" என்று கூறிக்கொண்டே இருப்பதுடன் கட்டுரைகளுக்கான தெரிவுகளையும் எனக்கு கூறி வழிகாட்டுவார் . இன்று நான் உங்களுக்கு பேட்டியளிக்கும் அளவுக்கு ஊடகத்துறையில் சிறப்புறுவதற்கு இந்த 4 பேரும் பிரதான காரணமானவர்கள்.

### 4.ஊடகத்துறையில் பத்திரிகை துறையை நீங்கள் தேர்வு செய்தமைக்கான முக்கிய காரணங்கள் ஏதும் இருக்கின்றதா?

ஆம். இலத்திரனியல் ஊடகங்களைப் பொறுத்தவரையில் அவை ஒலி, ஒளியுடன் தொடர்புபட்டவை. அதில் நாம் பணிபுரியும் போது நாம் மக்களுக்கு, சமூகத்திற்கு கொடுக்க நினைக்கும் விடயங்கள் அன்றுடன் முடிந்து விடும். கண்ணால் பார்த்து காதால் கேட்டு விட்டு விட்டு விடுவார்கள் ஆனால் அச்சு ஊடகங்களைப் பொறுத்தவரையில் நாம் அச்சு வடிவில் மக்களுக்கு, சமூகத்திற்கு கொடுக்கும் விடயங்கள் மக்கள் மனதில் பதிந்திருக்கும். சந்ததி சந்ததியாக நிலைத்து நிற்கும். அதனால்தான் நான் பத்திரிகை துறையை தெரிவு செய்தேன்.

### 5.தினக்குரல் பத்திரிகை எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அது மக்கள் மத்தியில் செய்திகளை கொண்டிணைப்பதில் தாக்கம் செலுத்தியுள்ளது என்று கருதுகிறீர்களா?

தினக்குரல் பத்திரிகை 06-04-1997 ஆம் ஆண்டில் பிரபல வர்த்தகரான எ.ஸ்.பி. சாமி அவர்களினால் பொன் இராசகோபால் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆம் நிச்சயமாக! தினக்குரலுக்கு முதலில் வந்த எத்தனையோ பத்திரிகைகள்,தினக்குரலின் பின்னர் வெளிவந்த எத்தனையோ பத்திரிகைகள் மூடப்பட்டும் காணாமல் போன நிலையிலும் மின்னஞ்சல் பத்திரிகைகளாக வெளிவந்து கொண்டிருக்கும் நிலையிலும் மக்கள் மத்தியில் செய்திகளை கொண்டிணைப்பதில் தாக்கம் செலுத்திய காரணத்தினால்தான் தினக்குரல் பத்திரிகை தமிழ் பேசும் மக்களின் தன்மானக்குரலாக ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

### 6.இத்துறையில் நீங்கள் தொடர்ந்து பயணிக்கையில் முகம் கொடுத்த முக்கிய சவால்கள் ஏதேனும் உண்டா?

பத்திரிகைத் துறையில் நான் சுகாதாரம், சுற்றுச்சூழல் துறையை பிரதானமாக எடுத்துக்கொண்டதால் அச்சுறுத்தல்கள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் அவைதொடர்பான தகவல்களை திரட்டுவதில் தேடல்களை மேற்கொள்ளவதில் பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் கொரோனா காலப்பகுதி எமக்கு மிகப்பெரும் சவாலானதாகவே இருந்தது.

### 7.உங்கள் சேவைகளை பாராட்டி விருதுகள் கிடைக்க பெற்றுள்ளனவா? அவை பற்றிக் குறிப்பிடுங்கள்.

ஊடகத்துறையில் நிறைய விருதுகளைப் பெற்றுள்ளேன். 2009 ஆம் ஆண்டு தினக்குரலில் இணைந்து கொண்ட நான் அதே ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய



சிறந்த சமூக அபிவிருத்தி செய்திகளுக்கான "சுப்பிரமணியம் செட்டியார் விருது" பெற்றுக் கொண்டேன். அதனைத்தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய விவரணக் கட்டுரைகளுக்கான விருதையும், அதே ஆண்டு இலங்கை மருத்துவ சங்கம் வழங்கிய சிறந்த மருத்துவ கட்டுரைகளுக்கான விருதையும், 2012 ஆம் ஆண்டும் இலங்கை மருத்துவ சங்கம் வழங்கிய சிறந்த மருத்துவ கட்டுரைகளுக்கான விருதையும், 2013 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய விவரணக் கட்டுரைகளுக்கான விருதையும், 2014ஆம் ஆண்டும் இலங்கை மருத்துவ சங்கம் வழங்கிய சிறந்த மருத்துவ கட்டுரைகளுக்கான விருதையும், 2014 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுற்று சூழல் அறிக்கையிடலுக்கான விருதையும் பெற்றுள்ளேன்.

அதேபோன்று 2015 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிறந்த முஸ்லிம் பெண் ஊடகவியலாளருக்கான விருதையும், 2018 ஆம் ஆண்டு சிறந்த விவரணக் கட்டுரைகளுக்கான ஜனாதிபதி விருதையும், அதே ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுகாதாரக்கட்டுரைகளுக்கான விருதையும், 2019 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுற்று சூழல் அறிக்கையிடலுக்கான விருதையும், அதே ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுகாதாரக்கட்டுரைகளுக்கான விருதையும், 2020 ஆம் ஆண்டு ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுகாதாரக்கட்டுரைகளுக்கான விருதையும், 2021 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுகாதாரக்கட்டுரைகளுக்கான விருதையும் 2021-2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுற்று சூழல் அறிக்கையிடலுக்கான ஜனாதிபதி வெண்கல விருதையும், 2022 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிக்கைப் பேரவையும் இணைந்து வழங்கிய சிறந்த சுகாதாரக்கட்டுரைகளுக்கான விருதையும்,2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை மருத்துவ சங்கம் வழங்கிய சிறந்த மருத்துவ கட்டுரைகளுக்கான விருதையும், 2024 ஆம் ஆண்டுக்கான சுற்று சூழல் அறிக்கையிடலுக்கான ஜனாதிபதி தங்க விருது என 18 விருதுகளைப் பெற்றுள்ளேன்.

## 8.ஊடகத்துறையில் பணியாற்ற விரும்பும் ஏனைய பெண்களுக்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?

ஊடகத்துறை என்பது சவால்கள், அச்சுறுத்தல்கள் நிறைந்தது. எனவே அதனை எதிர்கொள்ளக்கூடிய மன தைரியம் பெண் ஊடகவியலாளர்களிடம் இருக்க வேண்டும். அத்தோடு ஊடகத்துறையில் பத்தோடு பதினொன்றாக இருந்து விடாது தனித்துவமாக செயற்பட வேண்டும். நீங்கள்












தேர்ந்தெடுக்கும் துறையுடன் தொடர்புபட்டவர்களுடனான தொடர்புகளைப் பேண வேண்டும். எவ்விடயத்தையும் நேர்மையுடனும் நிதானத்துடனும் அணுக வேண்டும்.

## 9.நீங்கள் துணிந்தெழு சஞ்சிகையை எவ்வாறு நோக்குகிறீர்கள்?

"துணிந்தெழு" பெயரிலேயே செய்தி இருக்கின்றது. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் தைரியத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கும் சஞ்சிகை. அதுமட்டுமன்றி இலைமறை காயாக இருக்கும் திறமையானவர்கள் தேடிப்பிடித்து இனம்கண்டு வெளியுலகுக்கு கொண்டுவருவதில் அளப்பரிய சேவையாற்றும் சஞ்சிகை பெரும் பெரும் நிறுவனங்களே சஞ்சிகைகளை பத்திரிகைகளை ஊடக நிறுவனங்களை கொண்டு நடத்துவதில் நிதி, பொருளாதார நிலைமைகளினால் தடுமாறி வரும் நிலையில் "துணிந்தெழு" இவற்றுக்கெல்லாம் அஞ்சாது துணிவுடன் பயணிப்பதே அதன் சிறப்பு.

## 10.இந்த நேர்காணலின் ஊடாக விசேடமாக கூற விரும்பும் செய்திகள் என்ன?

ஊடகத்துறையில் குறிப்பாக அச்சு ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு போதாமலுள்ளது. எனவே பெண்கள் "துணிந்தெழ" வேண்டும்.சமூகத்துக்கு எம்மால் முடிந்த நல்லவற்றை செய்ய ஊடகங்களை பெண்கள் பயன்படுத்த வேண்டும். பெண் என்பவள் நல்லவனவற்றை ஆக்கவும் தீயனவற்றை அழிக்கவும் முடிந்தவள் என்பதனை நிரூபிக்க ஊடகங்கள் சிறந்த சாதனம் என்பதனை பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.




# தப்பிப் பிழைத்த எண்ணங்கள் நூல் அறிமுகம்

100 கவிதைகளை கொண்டு தொகுக்கப்பட்ட நவீன கவிதைத் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ள "தப்பிப் பிழைத்த எண்ணங்கள்" இந்நூல்; கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கணித விஞ்ஞான ஆசியராக பணியாற்றும் நூலாசியர் ஹப்ஸா பஹுமீர் அவர்களின் கன்னி வெளியீடாக வெளிவந்துள்ளது.

முகநூல் வாயிலாக பிரசுரிக்கப்பட்ட கவிதைகளையும், கவிதைப் போட்டி, இலக்கிய வெளியீடுகளில் பிரசுரமான தேர்வு செய்யப்பட்ட கவிகளை கொண்டு ஆக்கப்பட்ட நூலாக இதனை கருதலாம்.

தமிழ்த்தொண்டன் பைந்தமிழ் சங்கம் மற்றும் நிலா வட்ட இலக்கிய அமைப்பு இணைந்து நிகழ்த்திய பத்தாயிரம் கொண்ட கவிதைத் தொகுப்பு நூலில் இக்கவிஞரின் நூறு கவிதைகளும் இடம்பெற்றுள்ளது. அக்கவிதைத் தொகுப்பினை தனி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

அச்சாதனையில் தனது அடையாளத்தை பதிப்பு செய்த நூலாசியர் அவர்களின் “தப்பிப் பிழைத்த எண்ணங்கள்” நூல் வெளியீடு ஒன்லைன் நிகழ்நிலை மூலமாக பேனா துளிகள் மற்றும் அக்கினிச் சிறகுகள் இலக்கிய குழுமங்களின் ஒருங்கிணைப்புடன் 05.05.2024 அன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வின் முதன்மை அழைப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் தமிழ் பாட ஆசிரியர் ஏ.டபள்யூ. ஹஸ்மதுல்லாஹ், பேனா துளிகள் பணிப்பாளர் றஜா முஹம்மது, அக்கினிச் சிறகுகள் நிறுவனர் ஸப்னா நஸீர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**தப்பிப் பிழைத்த_எண்ணங்கள்**
**நூலாசியர்** - **ஹப்ஸா பஹுமீர்**
**வகை** - **கவிதைத் தொகுப்பு**
**வெளியீடு** - **மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம்**
**பக்கம்** - **107**
**ஆண்டு** - **2024.May**
**தொடர்புகளிற்கு** - **+94 77 033 2575**
**விலை** - **550/- (தபால் உட்பட)**

# தலைமுடியை தேநீர் குவளையாக மாற்றிய பெண்!



ஈரான் நாட்டைச் சேர்ந்த சிகை அலங்கார நிபுணர் ஒருவர் பெண்ணின் தலைமுடியை தேநீர் குவளைப்போல வடிவமைத்து அதில் தண்ணீர் ஊற்றும் காணொளி சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஈரான் சிகை அலங்கார நிபுணர் சயிதே அரியாய் இதுவரை யாரும் கண்டிராத வகையில் தலைமுடியை நிஜமான தேநீர் குவளையாக வடிவமைத்து வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

இறுதியில் தேநீர் குவளையாக வடிவம் வந்ததும் அதில் தண்ணீர் மற்றும் ஆறிய தேநீரை ஊற்றி மற்றொரு நிரப்பி காட்டியுள்ளார்.

# வெறும் கயிற்றில் நீண்ட தூர சாகச பயணம் — புதிய சாதனை படைத்த நபர்!



இத்தாலியில் உள்ள மெசினா ஜலசந்தி கடலில் இருந்து சிசிலி வரை சுமார் 3.6 கிலோமீற்றர் தூரம் கயிற்றில் நடந்து புதிய சாதனைப் படைத்திருக்கிறார் எஸ்டோனியா நாட்டை சேர்ந்த தடகள வீரர் ஜான் ரூஸ். அவர் கயிற்றில் பிடிகள் எதுவும் இல்லாமல் முந்தைய சாதனையான 2.7 கிலோமீற்றர் தூரத்தை கடந்து முறியடித்தார்.

இருந்தபோதிலும் கயிற்றுப்பாலத்தின் 3 ஆயிரத்து 56 மீற்றரை கடந்த அவர், எஞ்சிய 80 மீற்றரை கடப்பதற்குள் சமநிலையை தவறவிட்டு, கீழிறங்கியதால் முழுமையான புதிய சாதனையை தவறவிட்டுள்ளார். அவர் கடலுக்கு மேலே நடந்தபோது 100 மீட்டர் உயரத்தில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# பெனாஸில் ஷிப்னா எழுதிய
# மௌன மொழிகள் நூல் வெளியீட்டு விழா

ஸ்கை தமிழ் பதிப்பகம் வெளியீட்டில் பெனாஸில் ஷிப்னா எழுதிய மௌன மொழிகள் நூல் வெளியீட்டு விழா கடந்த ஜூன் 11 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இணையதள வாயிலாக நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக கலாபூஷணம் ஏறூர் கவிக்கோ ஏ.சீ. அப்துல் ரஹ்மான் அவர்கள் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக கண்டி பதியுதீன் முகமது மகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற உயர்தர பிரிவு பிரதி அதிபர் கலாபூஷணம் இஸ்லாமிய செல்வி ஏ.யு.எல்.எஸ். அரஃபா அவர்களும் அலிகார் தேசிய பாடசாலை முன்னாள் பிரதி அதிபர் திருமதி. எப்.டபிள்யூ.எம். நசீர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஸ்கை தமிழ் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் எம்.எச்.எம். ஷிப்கான் கிராத் ஓத நிகழ்வுகள் ஆரம்பம் ஆகின துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் முனீரா வாஹித் வரவேற்புரை நிகழ்த்த நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தை திருமதி. எப்.டபிள்யூ.எம். நசீர் வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம் பெற்றதுடன் நூலிற்கான நயவுரையை இஸ்லாமியச் செல்வி ஏ.யு.எல்.எஸ். அரஃபா அவர்கள் வழங்கி வைத்தார்கள். தன்னுடைய எழுத்துப் பயணம் பற்றிய பகிர்ந்தலுடன் நூலாசிரியர் உரை இடம் பெற்றது.

இந்த நிகழ்வின்போது ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் நூலாசிரியரின் அழைப்பை ஏற்று இலக்கிய ஆர்வலர்கள், நூலாசிரியரின் குடும்பத்தினர்கள் நண்பர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். கலந்து

கொண்டிருந்த அனைவருக்கும் நன்றி கூறும் முகமாக நன்றியுரை துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினரும் சிறுகதை எழுத்தாளருமான ரிஹானா அன்வர் ஷா வழங்கி வைத்தார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவை ஸ்கை தமிழ் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஷிஹானா நௌபர் ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம். பாஸித் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நெறிப்படுத்தியிருந்ததுடன் ஆசிரியர் குழு உறுப்பினர், தொகுப்பாளர் திருமதி. ஆஷிகா பர்சான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நூலானது ஸ்கை தமிழ் பதிப்பகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை இணைந்து வெளியிடும் பத்தாவது நூல் வெளியீடு என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.




# உளவியல் கண்ணோட்டம்

## - உணர்வுகள் -

ஒரு மனிதனின் நடவடிக்கை அவனது உணர்வு ரீதியான விடயங்களில் அதிக பங்களிப்பை செலுத்துகின்றன. நமக்கு ஒரு விடயத்தை செய்ய தூண்டுவதும், செய்யவிடாமல் தடுப்பதும் நமது உணர்வுகள் ஆகும். நம்மை முன்னேற்றமடையாமல் பின்னோக்கி செல்ல காரணமாக அமைபவை ÷ சோகம், வெறுப்பு, ஏக்கம், எதிர்ப்பார்ப்பு எனலாம். ஏதாவது ஓரிரு விடயங்களில் சிறு வெற்றியை அடைந்தால் கூட அதில் அடையும் பரவச நிலை உள்ளத்திலிருந்து நம்மை தாக்கக்கூடிய விடயங்களாகும்.

உணர்வுகளை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால் மட்டுமே உள்ளமும் எதிர்மறை சிந்தனைகளில் இருந்து காத்துக் கொள்ளும் . சீரான சிந்தனையானது நாம் வாழ்வில் எதிர்கொள்ளும் விடயங்களுக்கு தீர்வாக அமைகின்றது. ஒரு புதிய விடயத்தை கற்றுக் கொள்வதாக இருந்தாலும், ஒரு வேலையை புதிதாக ஆரம்பிப்பதாக இருந்தாலும் முதல் நாள் இருக்கும் ஆர்வம் கடைசி வரை இருப்பதில்லை.
அதே விடயங்களை நாம் உரிமையாக உணர்ந்து செய்வதால் மட்டுமே அதில் சுய திருப்தியும் இருக்கும்.
நமது ஆர்வத்தை தூண்டும் உணர்வுகளுக்கு சிந்தனை தான் மூலதனமாக அமைகின்றது.

தொடரும்.....

**சாதியா சம்சுதீன்**
**நாவலப்பிட்டி**

# எனது விழிகள்

## கருப்பொருள்: இயற்கையின் தாய்மை




மேகலா ஸ்ரீனிவாசகம்
கொழும்பு



ரிஷான் ரசீக்
சவூதி அரேபியா



எப். ஜைனப் (அமீரா)
அம்பாந்தோட்டை



எம்.ஜே.ஜாவித் நஜா
பாலமுனை



ஏ.ஜே.பாத்திமா ஃபருஸ்தா
மட்டக்களப்பு




பாத்திமா அகிலா
வவுனியா



உ.ரமணன்
நெல்லியடி



எம்.ஆர்.எப்.ருஷ்தா
மஹியங்கனை



எம்.எச்.சபி
அட்டாளைச்சேனை

உங்கள் தரமான புகைப்படங்களை
எமக்கு அனுப்பி வையுங்கள். +94752473075

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249

